mittee, Scott Road Area and his place was filled by Mr. N. Mylvaganam, Paymaster's Office, F.M.S. Police. The latter has been elected a member of the Central Committee.

It is with deep regret that we record the death of the late Mr. S. Sittampalam, retired Postmaster, at his residence in Scott Road, Kuala Lumpur, on 24th September, 1937. We extend our heartfelt sympathy to his breaved family.

Mr. E.A. Rasiah, Postmaster, Ulu Yam, returned from leave in Ceylon and has assumed duty at the G.P.O., Kuala Lumpur.

Mr. T. Chellappah, District Secretary, Bukit Bintang Area has moved to the Brickfields Area. He has done good work for the progress of the Society. Mr. S. Ponnampalam who was the first District Secretary for this Area has been elected in his place.

A meeting of the Council of the Malayan Saiva Sidthantha Sangam was held in the Sanga Nilayam on Saturday the 25th September at 5 p.m., at which the satisfactory progress of the construction of the Shivan Temple was reviewed and decisions were come to in respect of the forthcoming Deepavaly celebrations.

The Programme Committee of Vivekananda Ashrama met at the Committee Room of the Ashrama on Wednesday the 22nd instant at 7 p.m. when an elaborate and very useful programme of work for the year was decided upon.

The Chums Amateur Dramatic Association, Kuala Lumpur, staged the play "Demon Land" at the Kajang Theatre Hall in aid of the Kajang Tamil School on 18th September, 1937. Mr. R.N. Thamby-Thurai President of the Chums Amateur Dramatic Association was present with Mrs. Thamby-Thurai, Mr. and Mrs. J.R. Vethavanam and a few others from Kuala Lumpur were also present. The organisers were Messrs. V.S. Ponnampalam, S.S. Ambalavanar, K. S. Rengaswami Iyer, T. Ratnasingam, A. Ponniah and Dr. J.V. Seevaratnam. Mr. Rengaswami Iyer thanked the audience.

The Thirteenth Annual General Meeting of the Sangeetha Abivirthi Saba, Kuala Lumpur was held on 11th September, 1937 at 10 a.m. at its premises. Dr. A.E. Duraisamy, President was in the chair. The following were elected Office-bearers for the ensuing year:— President Dr. A. E. Duraisamy, Vice-Presidents Messrs. N. Praisoody and M. Sittampalam, Hon: Secretary Mr. S. Apputhurai, Hon: Treasurer Mr. K. Sivapragasam, Committee Messrs. S. Kangaratnam, P.S. Lourdes S.K. Thambiah, S. K. Naglingam, A. Samy, M. Kandiah, N. Ramasamy, S. Thirnavukkarasu, T. C. Seetharaman, and V.R. Nagalingam. Hon: Auditors Messrs. S. Muthiah and K. Sinnadurai.

The Tamilians' Physical Culture Association have had the proud distinction of becoming the undefeated champion of the "A" Division Foot-ball League for the year. This has won for them for the second time the much coveted "Watson Shield". In their last game in this competition, the Association Team defeated the Police Depot by 4 goals to 2. The final of the Foot-ball Cup Tie Competition was played between the T.P.C.A. and the Police Depot on Saturday the 18th September, at the Stadium, when the Depot Team was convincingly beaten by 3 goals to nil. The winners were presented with the Shield and Cup by the Honourable Mr. S.W. Jones, the British Resident, Selangor, on the 18th instant immediately after the game.

The President of the Foot-ball Association, Selangor, commented very, highly on the remarkably high standard of game played by the Teams.

The Variety enterainment given by the members of the Jaffnese Youth League on 25.9.37 at the Town Hall, Kuala Lumpur was a successful one.

Each of the items contributed was good and the actors did their parts creditably.

Taiping.

Dr. M.E.T. Chelvam of Teluk Anson is transferred to Taiping District Hospital Larut.

Mr. A. Veluppillai, Assistant Postmaster, Ipoh, has been promoted as Postmaster, Taiping.

Mr. S. Thiagarajah, P. & T., Kuala Lumpur, has been transferred to Taiping in place of Mr. Nagalingam retired.

Mr. E.S. Muthu, Customs, Taiping has been transferred to Motor Vehicles Department, Ipoh. His place has been taken by Mr. T. Balasingam of Customs, Ipoh.

Mr. K. Kathiresu has returned from leave and resumed duty at the District Hospital Taiping.

Messrs. N.N. Rajah & Co. of Taiping stock our monthly journal *"Pathfinder"* for sale.

Ipoh.

Mr. V. Kangasu of the Medical Department, Ipoh has proceeded on transfer to the District Office, Lumut.

Mr. S. Kanapathypillai, Senior Sanitary Inspector, has been appointed to act as Chief Sanitary Inspector, Kinta Sanitary Board.

Mr. V. Thamboo of the Medical Department, Ipoh, was away to Ceylon on short leave and has returned and resumed duty.

Mr. V. Thuraisamy Relief Clerk, F.M.S.R., Ipoh, has left for Ceylon on long leave.

Mr. Murugasu, Clerk, Engineer Signal & Telegraph's Office Ipoh has left for Ceylon on a short holiday.

A daughter was born to Mr. and Mrs. A. Chinniah of the Railways Ipoh. Mrs. Chinniah is a member of the Society.

Mrs. Kandiah wife of Mr. A.S. Kandiah, Railways, Batu Gajah has returned from Ceylon.

A son was born to Mr. and Mrs. A. Kandavanam of the F.M.S.R., Batu Gajah.

His many friends will be glad to hear that Mr. R. Vairavapillai, Relief Clerk F.M.S.R., Batu Gajah who was confined to the Batu Gajah Hospital for over two weaks has recovered and resumed his normal duties.

The marriage of Mr. S. Vythilingam of the Magistrates Court, Ipoh, to Miss. Paramjothy Sinniah and neice of Mr. S. Karthigasu, Town Dispensary Ipoh, took place on the 9th September, at the brides residence at Mallagam. Jaffna. Mr. Vythilingam with his wife returned to Ipoh on the 19th September. A reception at their residence was given on Sunday the 26th September by Mr. and Mrs. S. Karthigasu in honour of the couple and was largely attended by their many friends and relatives including ladies.

Mr. M. Arunasalam has been appointed a member of the District Committee, J.C.S. Ltd., Ipoh, in place of Mr. S. Vythilingam resigned.

An internal bus service for Ipoh has been established by the Jubilee Transport Co. as from 20th September. We wish the promoters all success.

Kuala Langat.

Hindu Paripalana Sangam.

The Tenth Annual General Meeting of the Sangam was held on the 19th September, 1937 at the Sri Ganesha Vidhyasalai, Telok Datoh with the President Mr. P. M. Kumariah in the chair. There was a large attendance. The President appealed to all non-members to join the Sangam and support the Tamil School. The old members of the Committee were re-elected except a vacancy filled by another. The Sangam owns the Tamil School which receives Government assistance. It is proposed to extend the School. The Sangam maintains a Crematorium for the Hindus also.

Kajang.

Mr. C. Chinnathamby of P.W.D., Kajang and his family have proceeded to Ceylon on leave.

The Government offices and the public buildings in Kajang town and the suburbs were tastefully decorated in honour of the celebration of the 40th Anniversary of the Accession of His Highness the Sultan of Selangor. The Government offices were closed on the 13th September for the occasion, many from this district attended the function at Klang.

Kuala Kubu Bharu.

A daughter was born to Mr. and Mrs. V. Visuvanathan of Rawang.

Mr. S. Arumugam, Sanitary Inspector, Rawang has returned from leave and resumed duty.

Teluk Anson.

An important visitor to the district was Mr. Handy Perinpanayagam, Lecturer, Jaffna College, Vaddukoddai, who had been to Japan to attend the World Educational Conference. Mr. Perinpanayagam delivered interesting lectures in all important centres in Malaya.

Kuala Lipis.

Mr. N. Sabapathy of the Revenue Survey Office, Kuala Lipis has returned from leave in Ceylon.

Mr. A.R. Thuraisingam, General Hospital, Kuala Lipis who was successfully operated on for appendicitis in Kuala Lumpur has now returned and resumed duty.

Mr. A. Sivasamboo, Health Inspector, Kuala Lipis has been transferred to Temerloh.

A daughter was born to Mr. and Mrs. A. Ramalingam, of Kuala Lipis.

Mr. S. T. Jones, Overseer, P.W.D., Kuala Lipis has been transferred to Jerantut.

Mr. and Mrs. N. Panchanathan of Kuala Lipis returned from leave in Ceylon.

Dr. and Mrs. W.J. Jesudason who were married at Kuala Lumpur on 6.9.37 have returned to Kuala Lipis after spending their honeymoon at Cameron Highlands.

"வழி காட்டி"

—:o:—

யாழ்ப்பாணத்தவர் ஐக்கிய சங்க சஞ்சிகை.

பொருளடக்கம்	பக்கம்
பத்திராதிபர் குறிப்புகள்	1.
பெண்ணுரிமை	3.
தாய் மொழி	5.
தமிழ் மொழி	6.
நவநகரும் நம்மவரும்	7.
கிரக இலக்குமி	9.
சகோதரத்துவம்	10.
சங்கீதம்	13.
மனக்கவலை பலக்குறைவு	14.
நம் நாட்டு மேயோ	16.
பாலர் பகுதி	21.

எங்களிடத்தில் ரசீது, செக்றேள், பாக்கெட் செக்றேள், பில் புத்தகங்களும், அவ்டுமென்ட், ஐ.ஓ.யூ., புறமெசரி நோட்டுகளும், திருமணப் பத்திரிகை முதலிய அச்சு வேலைகளும், இன்னும் ஸ்டேஷனரி சாமான்களும், சகாயமான விகிதத்திற்கும், குறித்த காலந்தவறமலும் செய்து கொடுக்கப்படும்.

தேவையானவைகளுக்கு கீழ்கண்ட விலாசத்திற்கு ஆர்டர் செய்யுங்கள்.

இண்டர் நேஷனல் பிரின்டர்ஸ்,

27, ஜாவா ஸ்திரீட், கோலாலம்பூர்.

"வழி காட்டி"

யாழ்ப்பாணத்தவர் ஐக்கிய சங்க முன்னேற்ற உயரிய மாதப்பத்திரிகை.

மலர் க.	ஈசுர ஆண்டு, ஐப்பசித் திங்கள்.	இதழ் எ

பத்திராதிபர் குறிப்புகள்.

—:o:—

ஒன்றுபட்டாலுண்டு வாழ்வு—நம்மில்
ஒற்றுமை நீங்கிலனைவர்க்கும் தாழ்வு.

இருட்டிலுள்ள ஒரு பொருளைக் காண்பதற்குத் தீபமும் கண்ணும் வேண்டும். உலகிலுள்ள பல பொருள்களையும் காண்பதற்குச் சூரியவெளிச்சமிருப்பதால் நமது வெளிக்கண்களே போதுமானவை. ஆனால் உலகிலில்லாத பொருட்களைப் பார்ப்பதற்கு அறிவுச் சுடராகிய அகக்கண் ஒன்று அவசியம் வேண்டுமல்லவா? அதெப்படி உலகிலில்லாத பொருட்களை நாம் பார்ப்பது? உலகிலில்லாத பொருட்களை நாம் ஏன் பார்க்க வேண்டும்? அசாத்தியமான அலுவலில் மூளையைப் புகுத்தி ஏன் வீணுகத் தலையை உடைத்துக் கொள்ள வேண்டும்! என்ற பலவகைப் பட்ட கேள்விகள் உங்கள் மூளையில் உற்பத்தியாகும். அப்படியானால் நாம் வசித்துவரும் வீட்டையே எடுத்துக்கொள்வோம். இது எத்தனை வருஷங்களுக்கு முன் கட்டினது. ஒரு சுமார் இருபது வருஷங்களென்று வைப்போம். அதற்குமுன், அதாவது அது கட்டப்படுமுன், என்ன நிலைபரத்திலிருந்ததெனயோசித்துப்பாருங்கள். வீடு கட்டுவதற்கு வேண்டிய உபகரணங்களெல்லாம் இந்தப் பூமியிலேயே வேறு வேறு பெயருடன் இருந்தன. நம் அறிவுச் சுடராகிய அந்த அகக் கண்ணில் தோன்றிய உருவப்படி எல்லாவற்றையும் ஒன்றுசேர்த்து அமைக்க நமக்குப்பிரயோசனமுள்ள வீடாயிற்று. இவ்வளவையும் நன்றாக யோசித்துப்பாருங்கள்.

ஆதிகாலத்தவர் காற்றோட்டமான வெட்ட வெளிகளில் ஜீவித்திருப்பர். சிறிது காலத்தின் பின் அவர் தம் அகக்கண்ணில் தோற்றியபடி மரக்கொம்புகளாலும், புற்களாலும் வீடு அமைத்தனர். வர வர அவர்கள் சந்ததிபார் அத்துடன் மண்ணையும் சேர்த்துக் கொஞ்சம் திருத்தமாகக் கட்டினர். அவர்களின் பிற் சந்ததியார், கல், சுண்ணாம்பு என்பவற்றைக் கண்டுபிடித்து கல் வீடுகளாகக் கட்டினர். தற்காலத்தவர் அதையும் விட்டு சிமென்றாலேயே வீடு கட்டுகின்றனர். இது எல்லாம் நம் ஆதிகாலத்தவரின் அகக்கண் தோற்றத்தையே கொஞ்சம் கொஞ்சம் திருத்தி வந்ததல்லாது தற்காலத்தவரே எண்ணிச் செய்ததல்ல. நாம் நாளாந்தம் பாவிக்கும் உரல், உலக்கை, அம்மி, குளவி, அருவாள், திருவலகு போன்ற பொருட்களும் உலகில் அப்படி அப்படியே இருந்திராது. அதெல்லாம் நம் மூதாதையரின் அகக்கண்ணில் தோற்றிய பொருட்களே. அவர்களெல்லாம் பழங்காலத்தவர், ஒன்றுமறியாதவர் என்று வீம்பு பேசும் நாம் என்ன சாதித்துவிட்டோம். ஆதிகாலத்தில் ஆண்கள் குருகுல வாசம் செய்து குருவின் மூலபாக எல்லாம் அறிந்து அவர் சொற்றவறாது நடந்து சகோதரர்போல் யாவரும் ஒற்றுமையாகச் சேர்ந்து நின்று கமத்தொழிலோ கைத்தொழிலோ செய்து வந்தார்கள். பெண்களும் கோயிலிலோ மடத்திலோ தங்களுக்கு ஒழிந்த நேரங்களில் ஒன்று கூடிச் சந்தித்து பலநூல்களையும் வாசித்து உணர்ந்து தேவ பக்தி நிறைந்தவர்களாயிருந்து ஆண்களுக்குப் பல துறைகளிலும் உதவிபுரிந்து வந்தார்கள்.

ஆனால் தற்காலத்தில் முற்காலத்தைப் போல வசதியில்லை. அதிலும் இந்த அன்னிய ஊரில் அப்படி இருப்பது அசாத்தியமே. ஆனாலும் ய வரும், இவ்விடமிருக்கும நம் சமூகத்தவர் யாவரும், ஒன்று சேர்ந்து ஒற்றுமையுடன் ஒன்றை ஸ்தாபித்து நடத்தி அதனால் முன் னேற்றமடைய முடி யாதா. ' எல்லாவற்றிற் கும் முதல் ஐக்கியம் வேண்டும். நாம் யாவரும் ஐக்கியபபட்டால் இவ்வூரிலும் நம்மவர்க்குச் செ ய்யக்கூடியது அனந்தம உண்டு.

* * *

''பெண்ணுரிமை'' பெண்களுக்கு மிகுந்த உற் சாகங் கொடுக்கக் கூடியது. பெண்களைக் கேவ லமாக எண்ணி அவர்களை அடிமைகளாக மதி த்து நடக்கும் ஒவ்வொரு ஆண் மகனும் தான் தாயாகிய ஒரு பெண்ணேலேய அத்தன்மை யடைந்தான் என்ற எண்ணத்தை அவர்கள் மன தில் பதியச் செய்வதற்கு ஏற்ற அருமையான கட் டுரை. சகோதரர் உயர்ந்த தேசாபிமானியும் சிறந்த தாய்ப் பற்றுமுடையவர் என்பதைக் காட்டுகிறது.

* * *

நம் தாய் மொழியாகிய தமிழ்ப் பாஷையை அனேகர் விட்டு மறந்து தம் குழந்தைகளுக்கு சிறு வயதிலேயே அன்னிய பாஷையை அவர் தம் சிறு மூளையில் புகுத்தி விடுகின்றனர். அந்தோ பரிதாபம்! ''தாதியால வளர்க்கப்பட்ட குழந்தை பெற்றோரிலும் பார்க்க அந்தத் தாதியில் நேசம் வைத்தல் போல்'' அன்னிய பாஷையால் வளர்க் கபபட்ட குழந்தை வளர்ந்தபின்னும் அதையே தன் சுய பாஷை பென நினைத்துப் பேசுவதில் ஆச்சரியம் என்ன! அதற்கு அந்தப் பாஷையில் நேசம்கூட இருப்பதற்கு வேறு அத்தாட்சி வே ண்டுமா! சகோதரிகளே! உங்கள் குழந்தைகள் உங்களை மறந்து அன்னியரைத் தாயென மதித்து நேசித்தால் உங்கள் மனம் என்ன பாடுபடுமென் பதைச் சிந்தித்துப் பாருங்கள்! பகல் முழுதும் வெளியில் திரியும் ஆடவர் என்ன செய்வர். எல் லாம் உங்களை பொறுப்பல்லவா! பொறுமையுடன் நன்றாகச் சிந்தித்துப் பாருங்கள்!

* * *

சிறம்பானில் நடந்த கூட்டமும் அதன் நடபடி களும் ''நவநகரும் நம்மவரும்'' என்ற தலைப்புடன் வெளி வந்திருக்கிறது. போன மாசமே அது கிடைக்கப் பெற்றும் அந்தச் சஞ்சிகையில் இடமின்மையால் தாமதிக்க வேண்டியதாயிற்று. ஒவ்வொரு குறிச்சியிலும் தம் சமூகத்துக்கென ஒவ்வொரு சங்கம் ஏற்படுத்தி அதை மேன்மை யுற நடத்துவது அச்சமூகத்தவரின் முன்னேற் றத்தையும் ஒற்றுமையையும் தலைக்கிக் காட்டும்.

* * *

பெண்களைப் பற்றி மிகவும் புகழ்ச்சியாக ''சிர ஹஸ்தமி எடுத்துக்காட்டுகிறது. ஆனால் அவ் வளவு உண்மையே. யாவரையும் இப்படியான நிலைபரத்திற்குக் கொண்டு வந்தவளும் அன்னை யே. ''பெண்ணின் பெருந்தக்க யாவுள கற்பெ னும் திண்மையுண்டாகப் பெறின்''

* * *

மகேஸ்வரியால் ஆங்கிலத்தில் **"Slashings"** என்ற தலையங்கத்துடன் எழுதப்பட்ட கட்டு ரைக்குக் கற்றறிந்த சகோதரிகள் விடையிறுப் பார்கள் என்றே நம்புகிறோம். தேவி தங்கள் கூட்டத்தில் நடந்த சம்பாஷணையை அப்படியே எழுதியுள்ளாள். ஆங்கிலம் அறியாச் சகோதரி கள் அறிந்துகொள்ள உதவியாகும்.

படித்த பெண் பள்ளாங் குழியைத் தேடாள், கெட்டவரின் கூட்டத்தை நாடாள். ஒழிந்த நேரங்களில் அரும் நூல்களைக் கற்பதிலேயே தன் விலேயேறப் பெற்ற நேரத்தைச் செலவிடுவாள். சுன்னில்தானே படித்துணர்ந்து அந்த ஆனந்தத் தில் மயங்கி நிற்பாள். யோக்கியவதிகளின் சம் பாஷணையையும், புத்திசாலிகளின் சிநேகத்தை யும், அநுபோகஸ்தரின் புத்திவாதங்களையும் ஏற்று நிற்பாள். நாளுக்கு நாள் மேலுக்குமேல் தன் அறிவை விர்த்தி செய்து கொள்வாள். பய னில் சொல் அவளிடம் தோன்றாது பரநிந்தை அதாவது பிறரைத் தூஷித்தலேமகா பாவமெனக் கருதுவள். தன்னைப் போலவே மற்றவர்களும் என எண்ணுவாள். யாவரும் நல்லவர்களாயிரு ந்து அதனால் தேசம் சேஷமப்பட வேண்டுமென் பதே அவளது நித்திய பிரார்த்தனையாயிருக்கும்.

* * *

''மனக்கவலை பலக் குறைவு'' என்பது நம்மவர் முக்கியமாக உணரவேண்டியது. ஒருவர் வருத்த மாயிருந்தால் அதை எண்ணி எண்ணி அதே எக் கமாகத் தாங்களும் சாப்பிடாமல் அழுது கொ ண்டு வருத்தக்காரருக்கும் மனவருத்தத்தைக் கொடுத்துக் கொண்டு பக்கத்திலிருந்து சதா மூக்கைச் சிந்திக் கொண்டிருப்பது நம்மவரில் சிலருக்குள்ள கெட்ட குணம். அதெல்லாவற் றையும் தாங்கி ஏம்பெருமான் மேல் பழியைப் போட்டு நே யாளருக்கும் தென்பை உரைத்து நடக்கப் பழகிக்கொள்ள வேண்டும்.

சகோதர சகோதரிகள் கதைகள் எழுதும் போது தங்கள் சுய கற்பனையாலல்லது அனுபவமாலல் மிகவும் விசேஷம். இல்லாமல் வேறு புஸ்தகங்களிலிருந்து எடுத்து எழுதினால் அது இன்ன புஸ்தகம் என்பதையும் எழுதினால் மிகவும் நன்மையாயிருக்கும். உதாரணத்துக் காலல் காரியமில்லை. இல்லாமல் கதை ய அப் படியே மொழி பெயர்த்து எழுதுவதாலல் அது இன்ன புஸ்தகமென எழுதி விடுவது நல்லது.

* * *

சிலர் சந்தாவை முன்கூட்டி அனுப்பாததினால் பத்திரிகை அனுப்பப்படவில்லை. சகோதர சகோ தரிகள் இரண்டு வெள்ளியை உன்னி அப்படியே விட்டுவிடாமல், சந்தாத் தொகையைச் செலுத்தி தமிழ் மக்களின் அருங்சழவியாம் "வழிகாட்டி" யை ஆதரிப்பார்களென்றே நம்புகிறோம்.

பெண்ணுரிமை

———:o:———

பத்திராதிபர்,

வழி காட்டி.

ஐயா! நும்மாற் பிரசுரிக்கப்படும் பத்திரிகை வயதிலிளையோலையினும் எம் சமூகத்தில் பற்பல திருத்தங்களையும், ஓர் சில மேல் நோக்கு உணர்ச்சி களையும் எழுப்பச் சிறந்ததோர் தூண்டுகோலாய் விளங்குவதைக் காணை யுவகையுற்றுக் கீழ்வரும் இச்சிறு வியாசத்தை யெழுதத் தூண்டப் பெற் றேன். அன்றியும் எடுத்துக் கொண்ட விடயம் பெரிதாயினும், ஓர் அளவுக்கு மேற்பட்ட பாரத் தைத் தூக்கப் பாலலை "வழிகாட்டி" அஞ்சுவா னென வுன்னி, விடயத்தை என்னுலியன்றவாறு தெளிவாகவும், சுருக்கமாகவும் எழுதியிருக்கி றேன். தயைகூர்ந்து அடுத்த பிரசுரத்திற் பிர சுரிக்குமாறு வேண்டுகின்றேன்.

———

எண்ணரிய பிறவிகளைத் தன்னகத்தே கொண் டிருக்கும் இவ்வுலகமானது ஆண், பெண் என் னும் இரு பகுப்பாலும் ஆக்கப்பட்டிருப்பது தெளிவு.

இவ்விரண்டுங் கூடிய வொன்றே உலகமெனப் படும். ஆகவே இரு சக்திகள் சேர்ந்து ஒன் றினைப் பரிணமிக்கும் இடத்தில் இரண்டும் ஒரு தித்தியங்கினலன்றி உலகம் நல் வழியுறுதென் பது வெள்ளிடை மலை. தற்காலப் பெண் சமூ கத்தைப் பொதுவாக நோக்கின் பற்பல குறை பாடுகள் புலப்படும். அவற்றினை முக்கியமாக இருகூறுகப் பிரிக்கலாம். ஒன்று பழுத்த நாக கம். மற்றையது பெண்ணுரிமை. இவ்விது ஆட வாற் கடியப் பெற்றுப் பெண்சமுகம அந்தகார த்திலமிழ்ந்திக் கிடப்பது. இவற்றுள் முற் கூறிய தீமைக்குள், மேலைத் தேசங்களுட் சிலமிழந்தி வாழ்வையே குலைத்துக் கொள்ளுகின்றன. அது போக!

விடயத்திற் பிரவேசிக்கு முன் பெண்மையைப் பற்றி சில கூறவாம். பெண்மையாவது யாது? அடக்கம், பொறுமை, தியாகம், இரக்கம், அழகு, பரநலம், தொண்டு முதலியன அமையப் பெற்ற வொன்று. சிறு நீர்த்துளிகள் சேர்ந்து ஓர் நீர் நிலையாவது போல மேற்கூறிய குணங்க ளொன்றிப் பெண்மை யென்னும் பெயர் பெறு கின்றன.

பெண்ணென்பது இலக்கண வழக்கின்படி ஆகுபெயராகும். தண்மையும், வெம்மையும் உட லுலகத்துக்கு எத்துணை அவசியமோ அதனினுமே பெண்மையும், ஆண்மையும் வாழ்வு நலத்துக்கு வேண்டற்பாலன. ஒன்றற்கொன்று சிறுமை கற்பிப்பதற்கேதுவின்று. மலரும், மணமும் போலும் ஒளியும், மணியும் போலும ஒருங்கிய சம்பந்தமுடைத்து. அதினும் அப்பனினும், அன்னை அருள் மிக்காளன்றே. இதனலன்றே பொய்யா மொழிப் புலவரும் "அன்னையும் பிதா வும் முன்னறி தெய்வம்" என்று பெண்மையை முன் வைத்துக் கூறினர். இவ்வன்றிச் சகல புருஷார்த்தங்களையும் உணர்த்துங் கல்வியைக் கலை மகளென்றும் நம் பண்டையோர் பெண்பா லில் மொழிந்தனர். இவைபோன்று பற்பல மேற்கோள்களுள. அவை விரிக்கிற் பெருகு மென்றஞ்சி விடுவாம்.

சகல அறங்களிலும் சிறந்த அறமாகிய தாய் மையறத்தைத் தாங்கி வீரமக்களை யீன்று, அவர் களை நல் வழியில் வளர்த்து உலகினைச் சீர்மைப் படுத்தக் கடமை பூண்டவர்கள் பெண்களாவர். ஆண் மக்களென்று கூறும் நாமொவ்வொருவரும் ஒவ்வோர் தாயின் வயிற்றிலிருந்து பிறந்தவர்க ளன்றே. ஆனமையின் நாம் நம் மன்னைகட்கு உரிமை வழங்குதல் அத்தியாவசிய மென்பது சொல்ல மலை விளங்கும்.

உரிமை யென்பது, ஒவ்வொருவருக்கும் கட வுளாளளிக்கப்பட்ட வோர் கொடை. அது பிற ப்புரிமை யெனினும் பொருந்தும். அவ்வியற் கொடையாம் பிறப்புரிமை நமக்குள்ளது போ தாதென நம் சகோதரிகட்குரியதையும் நாம் கடி கின்றோம். பல துறைகளில் நம் சகோதரிகளின் உரிமை கடியப் பெறினும், அவைகளுள் முக்கிய மானது அவர்களின் மணக் காலத்தில் நடக்கும் பரிதாபக் காட்சியே.

மானிடப் பிறப்பெடுத்த ஒவ்வோர் ஆணும், பெண்ணும் தக்க பருவத்தே தத்தமக்கோர் துணையைத் தேடுதலியல்பு. இதிலிருந்து ஒவ் வொருவருடைய வாழ்க்கையையும் அளவிடலாம். அதற்குத் திருமண மெனப்படும். அன்பு வழி யில் இருமை கெடுத்து ஒருமை கூட்டுவதாகும். அது ஒரு பொழுது தோன்றி மறுபொழுது அழிவதன்று. இம்மை, மறுமை இரண்டிற்கும் உறுதுணையாயிருப்பது. இக்காலங்களிலே நம் சகோதரிகளை ஓர் உயிரற்ற பொருளாகவும், ஆண் களின் இன்ப நுகர்ச்சிக்குரிய ஓர் வஸ்துவாக வும கருதுகிறோ மென்றிபம்பினும் மிகையாகாது. தமக்கு வரவிருக்கும் வரனைப்பற்றி எட்டுணை யேனும் அறிவதற்கு அவர்கட்குச் சந்தப்பமளிக் கப்படுவதில்லை. கேவலம் நகை, புடவை வாங்குங் காலத்தில் தாய், தந்தையர், பிள்ளைகள் விரும்பங் கேட்கிறார். ஆனால் ஓர் பெண்ணின் வாழ்வினா டே நடிதும் உயிராய்க் கலந்து வாழத்தக்க நாயகனைப்பற்றிய விருப்பத்தைக் கேட்டல் ஓர் இழிவெனக் கருதப்படுகின்றது. இதுபற்றி நம் தொன்மையை இழந்தோம். சீதை, சாவித்திரி, தமயந்தி முதலிய பெண்ணிரத்தினங்கள் தம் நாயகரை எங்ஙனம் வரித்தனரென்பதைத் தீர வே மறந்தோம்.

இஃதன்றி, ஒருவர் தம் பெண்ணுக்கு வர னைத் தேடுங் காலத்தில் அவரிடத்தே நிகழ்த்தப் படுங் கேள்விகளுள் முக்கியமானது வரதட்சணை யாகும். வரதட்சணை யென்னும் பதத்தைச் சொல்லளவு பொருளாய் நோக்குமிடத்து, வரன்—தட்சணை எனப் புணரும். ஆகவே ஒரு வர் தன் பெண்ணின் வரனுக்களிக்கும் ஓர் தொ கைப் பணம் அன்றி வஸ்துவாகும். இஃது எம் சமூகத்தில் ஓர் கட்டாயமா யிருக்கின்றது. இக்கட்டாய வரதட்சணையிலிருந்து விலக்கப்படு வது யாதெனில்? இவ்வுலகிலுள்ள மற்றையபெண் சமூகத்தினரிலும் பார்க்க, நம் சகோதரிகள் மாத் திரம் நம் ஆடவர்க்கு ஒப்பற்றவரென்பது. ஆகையால் ஓர் தொகைப் பணத்திலோ அல் லது பொருட்களிலுலோ அது நிரப்பப்பட வேண்டுமென்பதுவாம். அஃதன்றேல், உலகத் திலெங்குமில்லா வோர் வழக்கம் நமக்குட் குடி கொண்டிருக்கக் காரணமென்னை. இக்கொடூரத் திலில், எண்ணிலை நம் சகோதரிகள் தக்க பண்பு, தக்க கல்வி, ஒழுக்கம் வாய்க்கப் பெற்றி ருந்தும் தகுந்த வரனை பெற்று வாழ்க்கையில் இன்பம் துய்க்க இயலாது அல்லற்படுவதை ஒவ் வொருவரும் பார்க்கின்றோமன்றே. கலியாண காலத்தில் நம் சகோதரிகளைக் கடைச் சரக்கைப் போல விலை பேசுவதை உற்று நோக்கின் நாகரீக வுலகம் நகைக்காமலிருக்குமா? அம்மம்மா! இதுபற்றிக் கூறின் எமது ஏடும் இடந்தரா.

பயிரின் தன்மை நிலத்தைப் பொறுத்தது போ ன்று ஓர் தேசத்திலே, அன்றிச் சமூகத்திலே சீர் மை அப்பெண்மணிகளைப் பொறுத்ததாகும். பெ ண்ணுரிமை, களையப்பட்ட எந்நாடும் பிறப்புரிமை யற்ற நாடாய்த் திகழ்வதற்கு நம் நாடே சான்று பகரும். பெண் மக்கள் எவ்வித இடுக்கணு மின்றிப் பிறப்புரிமை யின்பத்தை எங்கே நுகர் கிறார்களோ அங்கேயுள்ள ஆண்மக்கள் நாகரீக நுட்பமுணர்ந்தவர்களாகிறார்கள். அந்நாடே நாகரீகம் பெற்ற நாடாகும். "மாதா வயிறெறிய வாழா வொரு நாளும்" என்றபடி நம் சகோதரி தட்கு உரிமை யழுங்கும்வரையும் நம் சமூகத் துக்கு விமோசனமில்லை. அந்நிய சரியத்தார் போல் நாம் நம் சகோதரிகட்கு அவர் தம் பிறப் புரிமை வழங்கும் நாளெந்நாளோ! அந்நாளோ பொன்னாளாகும்.

"மாதர் தம்மை இழிவு செய்யும்
மடமையைக் கொளுத்துவோம்"

"பெண்மை வாழ்கென்று கூத்திடுவோமடா
பெண்மை வெல்கென்று கூத்திடுவோமடா
தண்மை இன்பநற் புண்ணியஞ் சேர்ந்தன
தாயின்பேரும் சதியென்ற நாமமும்"

—பாரதியார்.

இ. முருகேசு,
சென்னை.

: : தாய் மொழி : :

நாம் செய்ய வேண்டியதென்ன?

நம் குறை எடுத்துக் காட்டி, நற்போதனையூட்டும், "வழிகாட்டி"யை ஆர்வமொடு வாசிக்கு மருஞ்செல்விகளாம் சகோதரிகளே! அடியேன், சிற்றறிவு கொண்டு வரையுமிச்சிறு கட்டுரையை, 'எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு" என்ற வாறு பயன்படுத்திக்கொள்ள வேண்டுகிறேன். உலகெங்கணும் பெண்கள் சுதந்தர கர்ச்சனையிலும், விஞ்ஞான மேம்பாட்டிலும், மித மிஞ்சிய நாகரீகத்திலும், மூழ்கியுள்ள இவ்விருபதாம் நூற்றாண்டில், நாமும் நமது சமூகத்தினரிடையே கடந்த சில ஆண்டுகளுக்கு முன்னும், பின்னுமிருந்து வரும் மாறுதல்களைக் கவனித்து அதற்கேற்ற வழியில் நடப்பதே நமது கடமையாகும். நமது பாட்டியாரை எடுத்துக் கொள்வோம். அவரிடம் நாம் சம்பாஷித்தோமானால், அயல் வீட்டுக் கதைகளையும், அடுத்த இரண்டு மூன்று மைல்களுக்கப்பால் நிகழும் சம்பவங்களையும், பெரிய கதையாய்க் கதைத்திறதை அடிக்கடி கேள்விப்பட்டிருக்கிறோம். ஆனால், தற்கால நிலையோ அப்படியல்ல. பல்லாயிரக் கணக்கான மைல்களுக்கப்பால் நிகழும், பிரசங்கங்களையோ, புனைந்துரைகளையோ, பாடல்களையோ, அதே நிமிஷத்தில் ரேடியோ மூலம் அறியக் கூடிய வசதியுள்ள இக்காலத்தில், உலகின் ஒரு கோடியிலிருந்து, மற்றொரு கோடிக்குப் பிரயாணஞ் செய்யக்கூடிய பெரிய ஆகாய ரதங்களை மனிதருடைய அறிவு சிருஷ்டி செய்துள்ள இக்கால நிலைமையில், நாமும் நமது தாய்நாட்டைவிட்டு அயல்நாடு புகுந்து, பல சாதியினருடனும், பல மதங்களிடையும், பலவித கொள்கையினருடனும், பல பாஷையினரிடையும், இன்னுமிவைபோன்ற, பலவித கொள்கைகள் நிரம்பியுள்ள இவ்வுலகில், உண்மையில், நாம் அறிய வேண்டிய பல விஷயங்களிருப்பதால், நாம் ஒவ்வொருவரும் நமது சிற்றறிவுக்கு எட்டியவற்றை நமது சமூகத்திற்கு எடுத்துச் சொல்லவும், மற்றவர்கள் அறிவுக்கு எட்டியவற்றைச் சொல்லக் கேட்டு நாம் அறியவும், இதன்மூலம் நாம் பல விஷயங்களை ஒரே நேரத்தில், கிரகிக்கக் கூடிய, ஆற்றலும், அனுபவமும் முடையோர்களாய், நமது வாழ்க்கையை நலன் பெற நடத்துவதற்கு இவ் "வழிகாட்டி" என்ற பத்திரிகை நமது சமூகத்தினின்றும் தோன்றியுள்ளதை நினைந்து, ஆனந்தமடைவதோடு, நம்மழகியாம் "வழிகாட்டி"யென்மேலும் நற்றொண்டாற்ற எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்தித்து, நமது தாய் மொழியாம் தமிழ்க் கல்வி என்னும் விஷயத்தைப்பற்றிச் சொற்பம் எழுத அவாவுறுகிறேன். "அன்னையும், பிதாவும் முன்னறி தெய்வம்" என்னுமான்றோர் பொழிப்படி, முதன் முதல் ஓர் குழந்தை இவ்வுலகில் காண்பதும், பேசுவதும் தாயாலத்தான். "இவர்தான் உன் பிதா" என அன்னை பாலகனுக்குச் சுட்டிக்காட்டிய பின்னரே அப்பாலகன், தன் பிதாவை அறிந்து கொள்கிறது. ஆகையால் தாயால் கற்பிக்கப்படும் மொழி மிகச் சிறந்ததென தெளிவாக, விளங்கக் கிடக்கின்றது. இவ்வளவு சிறப்புற்ற தாய் மொழியை வளர்ப்பது நமது கடன் அல்லவோ! இன்னும், நாம் சாமான்ய நிலையிலிருந்து வரும் தமிழ் மொழியைப் பாராமுகமாயிருந்தோமானால் எவ்விதம் நமது ஆயுள்வேத வைத்தியம், மற்றுங் கைத் தொழில்கள், எங்களைவிட்டு மறைந்ததோ, அதேபோல நமது தமிழ்க் கல்வியின் சுவையும் எங்களைவிட்டு அகலுங்காலம் வந்துவிடும். பாருங்கள், நமது தாய் மொழியில், ஒரு சிறு நிகழ்ச்சி. இலகுவான சொற்பொழிவையும் நம்மில் பலபேர் விளங்கிக்கொள்ளக்கூடிய சக்தியற்றவர்களாயிருப்பதைப் பார்த்து மெய்வருந்தாமலிருக்க முடியவில்லை. இன்னுமொரு சர்சார் தாய் மொழியில் கதைக்கும் பொழுது இடை இடையே ஆங்கிலச் சொற்களைக் கலந்து கதைக்கிறார்கள். ஆனால் சிலருக்கேயன்றி, பலருக்கு அந்த ஆங்கிலச் சொல்லுக்குத் தமிழ்ச் சொல் தெரியாது. இப்படியே ஒவ்வொரு சொற்களாக நமது தாய் மொழியினின்றும் விலக்கிக் கொண்டே போவோமானால் இறுதியில் தாய்ப் பாஷையின் கெதிதான் என்ன? இவ்வாறு நம்தமிழ் மொழி உயரிய நிலையினின்று குன்றி வருவதற்குப் பல்வேறு காரணங்களிருப்பினும் நாம் அதனை மதிக்காமற் கவலையினமாயிருப்பதே அதற்கோர் பெரிய காரணமாகும். தாயை மதியாத நாம், தரணியில் இருந்தென்ன, இறந்தென்ன. இதை எண்ணி நமது பிள்ளைகளினிடையும் தமிழ்க்கல்வியை வளரச் செய்து நாமும் பல அறிவிற்கு

கந்த நூல்களையு மாராய்வோமானால், கல்வி அறிவோடு, உலக அறிவையும் பெறுவோம். நமதுதாய் மொழியிலுள்ள நூல்களில்கொல்லும் ஒவ்வொரு விஷயங்களும், நமது சரீரசுத்துக்கும், வாழ்க்கை நலனுக்கும், குடும்ப நிர்வாகத்துக்கும் ஆத்ம ஞானத்திற்கும் சிறந்ததாக இருக்கும். இதை நாம் கண்கூடாகக் கவனிக்கலாம். பாருங்கள் சகோதரிகளே! ஒவ்வொரு தேசத்தவர்களும், தங்கள் தங்கள் தேச சீதோஷ்ண நிலைமைக்கும், வசதிக்குமேற்றவாறு, நடை, உடை, சாப்பாடு வைத்திய முறை முதலியனவைகளைக் கைக்கொள்ளுகிறார்கள். மேனாட்டு மக்களாம் ஆங்கிலேயர்களும், தங்கள் தாய் மொழியாம் ஆங்கில மொழியைக் கற்றுத் தேர்ந்த பிறகே, பிற மொழியைக் கற்க முற்படுகின்றனர். இதனால், ஆங்கிலங் கற்பது குற்றம் என்று சொல்வதாக நினைத்துவிடக் கூடாது. உலக பாஷையாய் தற்போது விளங்கும் ஆங்கில பாஷையுங் கற்பது அவசியமே. ஆனால் நமது தாய் மொழியை மறந்து, பிற மொழியை கற்பதே குற்றமென்று சொல்ல வேண்டி இருக்கிறது. ஆதலால், நமது வருங்காலச் சந்ததிகளாயுள்ள, நம்சிறார்களுக்கு தாய் மொழியிலுள்ள, புத்தி விருத்திக்கும், பக்தி விருத்திக்குமான நூல்களை நன்றாகக் கற்பிப்போமானால் நல்ல அஸ்திவாரமிட்ட ஒரு சுவரானது கடும் புயலுக்கும், மழைக்கும் எவ்விதம் சாயாது நிற்கிறதோ அதேபோல் எவ்வித நவீன நாகரீகத் தோன்றினாலும் நமது சமூகம் அறிவிலும், ஆண்மையிலும் குன்றாது, காலத்திற்கேற்ற முறையில் நடந்து யோக்கியத்திற் சிறந்து விளங்கும். இவ்வாறில்லாமல் தாய் மொழியை மறந்து பிற மொழியினுந் தேர்ச்சி பெறக் கற்காமல் சிறிதளவு கற்பதானது, நின்ற கொப்பும்விட்டு பிடித்த கொப்பும் விட்டவர் கெதி போலாகும். இது போன்ற காரணங்களையும், இனி வருங்கால நிலைகளையும் யோசித்து, எங்கள் தாய் மொழியாம் தமிழ்க் கல்விக்கு மேன்மேலும் புத்துயிரளித்து

"கற்க கசடற கற்றவை கற்றபின்,
நிற்க அதற்குத் தக"

என்றவாறு கற்று நாம் நமது வாழ்க்கையில் நடைமுறையில் அனுஷ்டித்து வருவோமாக.

"கற்றதனலாயபய னென்கொல்வாலறிவன்
நற்றாடாள் சேராதார்"

நம் தாய் மொழியை நன்றாய்க் கற்றதனலாய பயனென்ன. நாம் ஒவ்வொருவரும், நன்றாக தாய் மொழியைக் கற்று, எமது அறிவுக்கு எட்டிய கருத்துக்களை, பல வழியாய் வெளிப்படுத்தும்போது தாய்ப்பற்று, மொழிப்பற்று, தேசப்பற்று உடையோர்களாய் யாபேருக்கும் நற்தொண்டாற்றி, இறுதியில் மேற் சொல்லிய குறள் வெண்பாப்படி எங்கும் நிறைந்த, எல்லாம் வல்ல இறைவனை உருக்கமான, மனமொழிகளால் தொழுது நற்கெதி பெறுவோமென்பதேயாம்.

ஜெகஜோதி

: : தமிழ் மொழி : :

"தமிழென்றல் இனிமை அது தேனேயாதும்
தமிழனைய பாடையொன்று தாரணியி லெங்குங் காணேன்"

தமிழ் என்னும் சொல்லிற்கு இனிமையென்னும் பொருளுண்டு. சிலர் தமிழென்பது திராவிடமென்ற சொல்லின் சிதைவென்பர். தமிழானது முழுமுதற்கடவுளாகிய பரமசிவனுல் அகத்தியருக்கு ஓதப்பெற்று, பின்பு ஆரியத்தின் மடியில் வளர்ந்து, தெலுங்கு, கன்னடம், மலையாளம், துளுவம் முதலிய பாஷைகளை ஈன்று, சங்கத்திருப்பிலேயிருந்து, வையையாற்றிலே தவழ்ந்து அனலிடை நின்று, கற்றோர் நாவில் நடந்து வந்த நற்தமிழ்மொழி மற்றைய மொழிகளுக்காட்டிலும் தொன்மையும் புகழுமுடைத்தன்றோ?

நம்மைத் தாலாட்டித் தூங்கவைத்ததும், நம் மழலைச் சொற்களால் பெற்றோரையும், சுற்றத்தினரையும் மகிழ்வித்ததும், மாதா, பிதா, குரு முதலில் உபதேசித்ததும், தொன்றுதொட்டு நம் முன்னோர்கள் பேசியதும், அருமையும், பெருமையும் நிறைந்த தமிழ் மொழியன்றோ.

நெற்றிக்கண்ணினையுடைய பரமசிவனுல் சங்கத்திலே இருந்து ஆராயப்பெற்ற நம்தாய் மொழியினை அலட்சியஞ் செய்துவிட்டு ஆங்கிலம், லத்தீன், கிறீக் முதலிய அன்னிய பாஷைகளை விரும்புதல் அழகோ! ஆங்கிலம், லத்தீன், கிறீக் முதலியனவும், தம் அளவில் சிறப்புப் பொருந்தியவைதான். அவகாசமுள்ளவர்கள் தாய்ப்பாஷையோடு அவைகளையும் கற்றல் நலமே. ஆனால் நாம் முதலில் நம் தாய்மொழியை நன்கு கற்றல் வேண்டும். 'மகாகவி ரவீந்திர நாதர்' 'லோகமான்ய திலகர்,' 'ஆச்சாரிய ஜெகதீஸ் சந்திரபோஸ்,' 'மகாத்மா காந்திபடிகள்,' போன்ற பெரியோர்கள் தாங்

கள் எழுதும் நூற்களைத் தத்தம் தாய்மொழி களில் எழுதுவதற்குக் காரணமென்ன? ஆங்கி லம் தெரியாமையா? அன்று! அன்று! தம் தாய்மொழிப்பற்றே!

தமிழ் மொழியின் கலங்காத் தூய்மையை, தனித்தியங்கும் பேராற்றலை, இலக்கண வரம்பை, இலக்கியப் பொலிவை யாரால் அளவிட்டறிய முடியும்? தமிழ் மக்களாகிய நாங்கள் "தேமது ரத் தமிழோசை உலகமெலாம் பரவும்வகை செய் தல் வேண்டும்" என்னும் பணியை மேற்கொள்ள வேண்டும். ஆகையால் தன்னேரிலாத் தமிழ் மொழியானது பண்டைப் பொலிவைப்பெற்று, உலகமெங்கணும் பிரகாசிக்கவேண்டுமாயின், நாம் "இறவாத புகழுடைய புது நூல்கள் தமிழ்மொழி யில் இயற்றல் வேண்டும்." பற்பல கோட்டங்களை யும், சங்கங்களையும் நிறுவல் வேண்டும். புது நூல் நிலையங்களைத் திறக்க வேண்டும். அத்து டன் மற்றும் பாஷைகளில் எழுதப் பெற்றிருக் கும் சாஸ்திரங்களையெல்லாம் நமது தமிழ் மொழி யில் மொழிபெயர்க்க வேண்டும். இவ்விதம் நாம் செய்வோமானால், நம் தாய்மொழி பண்டைப் பொ லிவைப் பெற்றுப் பிரகாசிப்பாள் என்பதில் ஐய மில்லை.

ஆகையால், கற்ற வல்லுனர்களாகிய தமிழ் மக் களே! விழியுங்கள்! எழுங்கள்! தமிழன்னை யின் சேவையை மேற்கொள்ளுங்கள். "என் கடன் பணிசெய்து கிடப்பதே" என்னும் மந்திர வாசகத்தை மறக்காதீர்கள்.

: "நவ நகரும் நம்மவரும்" :

நவம்-ஒன்பது, Sembilan-ஒன்பது, Negri Sembilan-நவநகர்.

—o—

— வே. ஆறுமுகன். —

—o—

நவநகரின் தலை நகராகிய சிறம்பான்கண் 21-8-37 மாலை 5-மணியளவில் விவேகானந்த ஆச்சிரமத்தில், இந்நகரில் வதியும் யாழ்ப்பாண ஆண் பெண் இருபாலரும் கூடினோம். "இலங் கைத் தமிழரின் சங்கம்" என்னும் அமைப்பிற் கூடியோரில், பெண்கள் குறைந்தும், ஆண்கள் கூடிய தொகையினராயு மிருந்தோம். வெகு சிரத் தையுடன் நடத்தப்பட்ட தேனீர் விருந்திற் சகலரும் மகிழ்வுற்றனர். திருமிகு தம்பிராசா, சமாதான நீதிபதி, அன்று சபாபதியானார். அனே கர் தமிழிலும், ஆங்கிலத்திலும் சொற்பெருக்காற் றினர். சொற்பொழிவின் சாரம், ஓர் "இலங் கைத் தமிழர் சங்கம்" ஸ்தாபிப்பதை வலியுறுத் தப்பட்டது. பெண்மணிகளிற் சிலரும் ஆங்ங னம் பிரசங்கித்தனர்.

ஓர் மகனை, கிராமமோ, சமூகமோ, தேயமோ, எதாயினும் சரி, முன்னேற வேண்டுமாயின் அறி வுடையோரின் ஞான வொளியிலீடுபடுவர். இந்த ஞானச்சுடர் பல துறைகளிற் பணியியற்றும் பத்திரிகைகள் மூலமாயும், சங்கங்களூடாயும், பிரசாரகரின் முயற்சியாலும், கழகங்களிலீடு பாடலாலும் அறிவுரைகள் புரப்பப்படலாம். அதி யில்—அச்சியந்திரங்களும், காகிதங்களும் கண்டு பிடிக்க முந்திய நாட்களில்—கழகங்களாலும், பிர சாரகர்களாலும், உலக தர்மம் பரப்பப்பட்டதாயி ற்று. இயேசு நாதர் தமது அன்பைத் தமது சிஷ்ய கூட்டத்தாராலும், புத்த பகவான் தமது கிரு பையைத் தமது ஆப்தர்களாலும், முகம்மது நபி நாயகம் தமது சகோதர வாஞ்சையைத் தமது நண்பர்களாலும், பரப்புவிக்க வில்லையா? இந் நவனம் பிரசாரத்திலீடுபட்டோர் எத்தகை திபா கிகள்.

தமது சீவியத்தி லெத்தகை மனக் கட்டுப்பாடு டையோர் என்பது அவர்களின் செயல்கள் விளக்கா நிற்கின்றன. காலதேய வர்த்த மானத் திற் கியைய பிரசாரகர்கள் தமது சீவியத்தில் எத் தனை கட்டுத் திட்ட முண்டு பண்ணினர். எவ் விதத இளைப்புமின்றி காடு, மலை, வனாந்தரங் கடந்து, ஊண் உறக்கமிழந்து, உடல் நலங் கெடு த்து இளக்கற்கரிய இல்லற வாழ்க்கையையும் நீத்து, பிரமச்சாரிகளாய் தமது போதனையிலீடுபட்டனர். இன்று அச்சியந்திரம் மலிந்த காலம், காகித உருவெடுப்பு அதிகரித்த காலம். ஆகவே பத்திரிகைகளாலும், துண்டுப் பிரசுரங் களாலும், முன்னேறும் வழிகளில் சங்கங்களும், கழகங்களும் ஈடுபட்டிருக்கின்றன. ஆனபடியால் அன்று யாம் ஸ்தாபிக்கவிருந்த சங்கம் எங்ஙனம் அமைக்கவேண்டும்? அதற்கு எமது கடமை என்ன? என்னும் இவ்விரண்டு விஷயங்களையுமே இங்கு கையாளப்பட்டிருக்கின்றது.

அன்று ஆரிய சொற்பொருக்கைச் செவி கொடுத்த வரையிற் பலருக்கு எவ்வித திருப்தியு மேற்படவில்லை என்னலாம். மக்கள் மூன்னேறு வது எதன் பொருட்டு? இன்ப வாழ்வின் பொ ருட்டு. இன்று இன்ப வாழ்வு பிறழ்ந்து பிளை பட்டிருக்கின்றது. குடியில் இன்பத்தையும், காமத்தி லின்பத்தையும் (காதலன்று) முதன்மை யெனக கொண்டு விட்டது. இவை இன்ப மன்று, துன்பமாகும். உண்மை இன்பம் மனச்சான்றுவழி கருமமியற்ற மிழிரும். நிஷ் காமிய பணியியற்றுவதையே மனச்சான்று பத ரும். அப்போ அமைதியுண்டாம். உலகியலுக் கப்பாலுள்ள பண்களிற்தான் மன அமைதி யுண்டு. பிற இன்றிருந்து நாளை அழிவன. உண் மையின்ப மூட்டாதன.

உலகம் நாகரீகத்திலீடுபட எத்தகை உழைப்பு நிகழ்த்துகின்றது. இன்று தம்மை நாகரீகமு டையோரென—அருளுலகில் வாழ்கின்றோமென எண்ணுபவர் உண்மை நாகரீகமெது என்பதை உணராதார். இவர் வதிவது மருளுலகில். உய ர்வு தாழ்வும், பெரிது, சிறிதும்; பிறவும் கருது மூலகம் எங்ஙனம் நாகரீகமுடையதாகும்? களவும், பொருமையும், அவாவும், பகையுமுடைய உலகம் எங்ஙனம் அருளுடையதாகும்? இது தான் மருளுலகமாகும்.

அதுபோன்று சங்கங்களும், வர்த்தமானிக ளும் தம்மை மேலாகச் சொல்லிக்கொள்ளுகின் றன. சாதிச் சண்டை, சமூகச் சண்டையூட் டும் பத்திரிகைகளா மூன்னேறும் நோக்கமுடை யன? பெண்களை மூலையி லொதுக்கிவிட்டுத் தாம் (ஆண்கள்) ஈட்டி இருக்கும் சங்கங்களா சீர்திரு த்துவன? இவை மனுஷ சமூகத்தைக் கீழ்ப் போக்காக்குவன. யான் பெரியவன், அவன் சிறியவன், யான் செல்வன், அவன் ஏழை, யான் உத்தியோக உயர்வுடையோன், அவன் பதவியிற் குறைந்தவன்; யான் உயர்சாதி, அவன கீழ்சாதி; என்னும் இன்னோரன்ன நோக்கமுடையவரா சீர்திருத்தக்காரர்? இவர்களா ஞானச் சுருடை யோர்—குருடருக்குச் சமானம். குருடர் குரு டரை வழிகாட்டுவது எங்ஙனம்?

ஆகவே எம்மவரின் மனப்பான்மை மாறவேண் டும்! விரிவான நோக்கம் உதிக்க வேண்டும். அப்போதான்யாமமுன்னேறலாம். கண்ணீரை ஒட் டும் கருணையும், உள்ளத்தை உருக்கும் அன்பும் அறிவின் ஆதத்தையுணர்த்துவன. தம்பாலுள் ளதை ஏழைகளுக்கு தற் புகழ்ச்சியின்றி, சுயநல மின்றி, ஈயுமாறு இது தூண்டிவிடும். சமத்துவத் தை யூட்டும் பொதுவுடமையை வலியுறுத்தும்; பிறர் துன்பங்கண்டு வாழாக் கிடக்கவிடாது. அனேக அறிஞர் உலக நாகரீக, பொதுவுடமை யில், சமத்துவத்தில், மூடிவெய்தும் என்னும் கொள்கையையுடையர்; இதை மறுக்க முடி யாது. பன்முறையு முண்மை. ஆகவே உலகம் எக்காலத்திலாவது இதை அனுபவித்தே தீர வேண்டும். இதுதான் நாகரீகமாள உலகம்; அருளுடைய உலகம். இது வருநாளென்நாளோ? இன்பமே; என்நாளும் துன்பமில்லாத உலகம். எதற்கும் அஞ்சுவதுமில்லை; அஞ்சவேண்டியது மில்லை; என்னும் வேளை. இது ஆராட்சிக்காறர் தீர உணர்ந்து கண்ட முடிவு.

ஆகவே இத்தகைய சங்கம் வேண்டும். இன்று ஆண் பெண் இரு பாலருக்கும் எவ்வித பிணக்கு மின்றி அன்புடைய சங்கம் வேண்டும். சமூகப் பிரிவினையை, கல்விச் சமரசத்தை ஏளர்க்கும் சங்கம் வேண்டும். சமூகம் எனக் கருதுவது மனுஷ சமூகம் முழுவதையுமே. அங்கு உலகியற் கல்வி, ஞானவியற்கல்வி இரண்டும் போதிக்கப் படவேண்டும். உலகியற் கல்வி யூட்டுங்கால் சீவியம் சிதைவின்றி, நடப்பதுடன், உட லோம்பலும் நிகழும். உடல் வலி மையுடைய மூளையும் வலுக்கும். அதாவது அறிவு வளரும். அறிவு வளர ஞானமுதிக்கும். இங்கு ஞானம் எனக் கருதுவது மொட்டை யடித்து, காவி பூண்டு, மணி ஏந்தி, தண்டு கமண் டலதாரியாய், பிரசன்னமாக வேண்டும் என்பதை யன்று. இது உண்மை ஞானமன்று. பேய்வி வேஷம். இது வெறுக்கத்தக்கது. இது பசுத் தோல் போர்த்த புலியை யொக்கும். உண்மைத் துறவு, பற்று அற்ற சீவியம். யான், எனது, என் னும் வித்தியாசம் அற்று, உலகில் லயப்பட்டு விடும். ஞானமேயாள கருதுவது. அதாவது பெருமை, கோபம், தற்புகழ்ச்சியற்று அன்பு, அடக்கம், பிறநலம், தாழ்மை இவை மிளிரவேண் டும். யாம் எல்லோரும் சாந்தமூர்த்திகளாய் உயிர் பெறவேண்டும்.

ஆகவே இச்சங்கத்திற்கு "சமரச சன்மார்க்க சங்கம்" எனப் பெயரிடலாம்.

மனுஷ இயற்கை ஒருவன் கெடுதியான் எதை யும் இயற்றில், உலகம் முழுவதும் அதிலீடுபட்டு விடும். இது மாய்கையின் செயல்போலும். பிறன் செய்வது நன்மையாயின் யாம் பின்பற்றலாம். தீங் காயின் அதை நீக்கவேண்டும். எமக்கு எதிர்புடை யதாயின் யாம் அதை அன்பால் வெல்லவேண்டும். எதிர்ப்பு எஞ்ஞான்றும் தீதானது. தீதைத் தீதால் வெல்ல முடியாது. நீதியால்தான் வெல்ல வேண்டும். ஆகவேயாம் தீதுநீக்கி நீதியிற்செல்வது முறை. சங்கங்கள் சீராக்குதுவனவாயின் சீர், மனு ஷசமூகம் முழுவதிற்கும் உரியதல்லவா? ஆகவே எவ்வித பிரிவினையுமின்றியிருப்ப இப்பெயர் சால வும் சிறந்தது.

இச்சபையில் எம்பெருமான் அருள் சுரக்கும், சமரசம், சன்மார்க்கம் என்னும் இப்பதமிரண்டும் பழைய தமிழ்ச்சொற்கள். அவற்றின் உரை ஆழமானது. மெய்ப்பொருளாகிய இறைவன் எமக்குத் தந்த சங்கம் இது. இற்றைச் சில ஆண்டுகளின் முன் தென் இந்தியாவில் வந்த இரா மலிங்க சுவாமிகள் இதை உணர்ந்து சமரச சன் மார்க்கத்தையிட்டு அனந்தம் பாக்களியற்றியுள் ளார். அவற்றை அவரியற்றிய நூலிற்காண்க. அவர் அத்துடன் நில்லாது வேலூரில் ஓர் சங்க மும் இப்பெயர்கொண்டு நிறுவியிருக்கின்றார்.

இச்சங்கம் இன்றும் புத்துயிருடன் நடக்கின் றது.

இதற்கு எமது கடமை என்ன? என்பதே நற்சமயம் ஆராய்வாம். சகல திருத்தங்களுட னும் சங்கத்தைக் காண்டல் போதுமானதன்று. இதில் யாம் பிரயாசையுடன் உழைப்பதே பிர தானம். அப்போதான் யாம் பலரிடமிருந்து அடை யலாம். இதற்கு விடா முயற்சி வேண்டும். ஊக் கமான உழைப்பு வேண்டும்; சோராமன உறுதி வேண்டும்; அமைதி வேண்டும். இன்று வல்ல ரசிலொன்றாகிய ஜேர்மனியை எடுப்பின் இது உணரலாம். கடந்தமகா யுத்தத்தில் எத்தகை நஷ்டப்பட்டிருந்தது. எத்துணை சிதைவுடன் அல்லலுற்றது. இதன் மத்தியில் கோர் கிட்லர் (Herr Hitler) தோன்றினன். அவனை இன்று சர்வாதிகாரியாக்கியது எது? அவனுடைய உறுதி யான மனம், சோராஉழைப்பு, விடாப் பிடியான பணி, வீரம், துணிவு, இவையே அவன் அளி வின்பாற் பட்ட சீர்திருத்தக்காரன் என்பதை யான் ஏற்கின்றேன். அவனுடைய மனப்பான்மை அடக்கியாள வேண்டும் என்னும் எண்ணத்தை உடையது. அது எமக்கு வேண்டாம். அவனு டைய உழைப்பே வேண்டியது. அவன் தனது கொள்கையைப் பரப்ப அறுவருடன் ஓர் சங்கத் தை ஸ்தாபித்துத் தானும் சேர்ந்து எழுவராகினர். இன்று ஜேர்மனி முழுவதும் அவன் கட்சியினர். தன் சங்கத்தின் உதவியால் இதைச் செய்து முடி த்து இன்று சர்வாதிகாரியானான்.

இத்தாலிய சர்வாதிகாரியை எடுப்போம். சிறு யோர் முசோலினி 42 பெயருடன் சங்கத்தை ஸ்தாபித்து அதன் கீழ் ஓர் பிரசாரालயத்தையும் நடத்தி ஓயாது உழைத்து இன்று இப்பதவியிலிரு க்கின்றான். இவனும் அழிவு வழி வந்தவன். ஆக்கவழி கோலாதவன். இவன் செயல்களும் வெறுக்கத்தக்கன. ஆனால் அவனிடமுள்ள ஊக் கம் பெரிதல்லவா. அதையேயான் எடுக்க விரும் புவது. அவனுடையபாதை பிழை. யாம் அதை நீக்குவோம்.

இத்தனை உழைப்பிற்கு வாலிபர் வேண்டும் அன்று இளைஞர் தாமாகவே முன் வந்துள்ளார் வயோதிகர் அனுபோகமுடையவர்; இவ்வனுப வத்தைத் தாம் பின்னணியிலிருந்து வாலிபரை முன்னிறுத்தி ஊட்டலாம். இதை நடத்த உடல் வன்மையும், மூளை ஆழமும் வேண்டும். உடல் வன்மையைச் சிதைத்த பெரியோர், வாலிபரிடம் ஒப்படைத்துத் தாம் வேண்டிய போதனை புரிய லாம். பெரியோர் கோருவது சேவையல்லவா? அச்சேவை எம்முறையிலும் ஆற்றலாமல்லவா? அவர்களுக்குத் தியாகத்தின் மாண்பும், சேவை யின் உயர்வும், தெரிந்திருக்கிறது. இதை இளைஞ ரிடம் புகுத்திப் பணியியற்றுவிப்பது நலம். இங் ஙனம் உழைப்பின் ஒற்றுமையுண்டு. எடுத்துக் கொண்ட சங்கமும் மிழிரும்.

வாழ்க! இச்சங்கம் ஓங்குக!!

:: நாகலிங்கமி ::

மானிடப் பிறவியிலும், சகல சீவராசிகளிலும் உள்ள பாகுபாடுபோலவே, ஆண், பெண் என இருபாலரையும் கடவுள் சிருஷ்டித்துள்ளார்.

இருவரும் மனமொத்துத் தங்களுக்குள்ள உலகக் கடமைகளைச் செய்து இறுதியில் தன்னை அடைய வேண்டுமென்பதே இறைவனின் திரு வுள்ளம்.

ஆண்களைப்போலவே பெண்களும் புத்தியை யும், சித்தத்தையும் படைத்தவர்கள். இன்னும் சொல்லப் புகின் ஆண்பாலரை விடப்பெண்கள் எடுத்த காரியத்தை திட சித்தத்துடன் சாதிக்க வல்லவர்கள் என்பதற்கு ஐயமில்லை.

மகாத்மா காந்தியடிகள் சன்கயசரித்திரத்தில், "கஸ்தூரிபாய், மெய்யுணர்வுள்ளவளாய், தான்

செய்யும் காரியத்திற்கு அனுகூலியாய் இருந்திரா விடில், தன் நோக்கப்படி தான் இவ்வள்வு காரியம் செய்திருக்க வியலாது" எனச் சொல்லி இருப் பதை வரசித்த நேயர்கள் அறிவார்கள். இருவரும் மனமொத்துச் செய்யும் காரியங்கள் இத்தகைய மேன்மையை அடைகின்றன.

வீர பராக்கிரமம் மிகுதியும் கொண்ட நெப் போலியனும், ஒரு இடத்தில், தாய்மார்களே புத் திரர்களைத் தீரராகவும், நல்லவர்களாகவும் செய்ய வல்லவர்களென்றும், தன் தாயின் கூர்மையான புத்திமதியாலும், நல்லுபதேசத்தாலுமே தான் அவ்வளவு தீரமான செயல்களைச் செய்து வெற்றி கொண்டதாகவும் சொல்லி இருக்கிறார்.

ஓர் ஆங்கிலக் கவிஞ்ஞரும் "The Hand that rocks the cradle rules the world" "தொட்டிலையாட்டும் அக்கையே இவ்வுலகை ஆளு கிறது" என்று ஓரிடத்தில் எழுதியிருக்கிறார்.

அதுபோலவே நம் தமிழ் பாஷையிலும் "ஐந் தில் வளையாதது ஐம்பதில் வளையாது" "தொட் டிற் பழக்கம் சுடுகாடுமட்டும்" என்ற பழமொழி கள் விழங்கி வருகின்றன.

ஆகவே பிள்ளைகள் சிறு வயதில் தாயாரால் வளர்க்கப்பட்டு அவர்கள் ஆதீனத்தில் இருக்கி றார்கள். அவர்களுக்கு அப்பொழுதே நல்ல எண்ணங்களும் வார்த்தைகளும் நேர்மையான காரியங்களும் பழக்கமாகிவிடின், அவர்கள் பெரி யவர்களாகும்போது நல்லவர்களாகவும், யாரிட மும் அன்பாய்ப் பேசுகிறவர்களாகவும், தங்கள் காரியத்தைக் குறித்த நேரம் தவறாமல் செய்கிற வர்களாகவும், காண்பவர்கள், "இப்பிள்ளையைப் பெற்றவளன்றே பாக்கியசாலி" எனப்புகழ் கேட் கும் சிலாக்கியத்தை யடைகிறார்கள்.

ஒரு தேசம் முன்னேற்றமடைய வேண்டின் அதுவும் ஸ்திரீகளாற் தான் செய்யமுடியும். ஜனத்தொகையில் பாதியாயுள்ள ஸ்திரீகள் கல்வி யிலும் முன்னேற்றமடைந்தால் தான் தேசம் முன்னேற்றமடையும்.

சிறு தேசமான ஜப்பான் முன்னேற்றமடைந்த காரணங்களுள் பெண் கல்வியும் ஒன்று. அங்கு 100-க்கு 90 பெண்கள் படித்தவர்களாய் இருக் கிறார்கள். நம்மவரில் ஆங்காங்கு சில சகோதரிகள் உயர்தரக் கல்வியின் உரிமை பெற்றாலும், பல சகோதரிகள் தாய்பாஷையில் எழுதத்தெரியாமல் இருக்கிறார்கள். ஆகையால் பெண்களுக்குப் போதுமான தொகை யில் பல கல்விச்சாலைகள் ஏற்படுத்திக் கட்டா யக் கல்வியைப் புகட்ட வேண்டும்.

ஒரு இறக்கையை உடைய பறவை எப்படி மேல் பறக்க முடியாதோ, அது போல் ஒரு வகு ப்பான ஆண்கள் மட்டும் முன்னேற்ற மடைதல் கூடாத காரியம். பெண்களும் கல்வி யறிவு வளர்ந்தோங்கி சகல விஷயங்களையும் அறி ந்தவர்களாய் இருந்தால்தான் நம் தேசம் உயர் வடையும். தகுந்த வசதியும், சௌகரியங்களும் கொடுக்கப்படின் நம் இந்திய ஸ்திரீகள் சகலரும் கல்வியிற் சிறந்து விளங்குவார்களென்பதற்கு ஐயமில்லை.

பகவானும், யாருக்கு பூசை செய்யாவிட்டா லும், பதிவிரதையான ஸ்திரீகளை எப்போதும் பூசிக்கவேண்டும் எனச் சொல்லியிருக்கிறார்.

ஆகையால் நற்குண நற்செய்கைகளையுடைய பெண்களால் உலகம் உயர்வடையும் அவர்கள் பிறந்தகுலத்திலும் புகுந்தகுலத்திலும் பொன்னே எனப் போற்றப்பட்டு, கண் எனக்கருதப்படுவார் கள். சகல மக்களையும் படைக்கும் ஈசுவரன் என்றும் பெண்களுக்குப் பெருமையையும் புக ழையும் அளிப்பாராக.

—ச. மு.

சகோதரத்துவம்.

இக்குணமுடையவர்களைத்தான் அறிவாளிகளென்றும், பெருந்தன்மை உடையவர்களென்றும், பலவாறு கூறுவது. பூமியின்கண் உள்ள சரா சரங்களனைத்தையும் படைத்துக் காத்துவரும் ஈசன் யாவருக்கும் பொதுவென்றும், அவருக்கு நாமெல்லோரும் சமம் என்றும் அறிவோம். ஒரு தந்தைக்குப் பல பிள்ளைகளிருந்தாலும் எல்லாப் பிள்ளைகள் பேரிலும் அன்பு இருக்கிறது. ஆனா லும் சற்புத்திரன் பேரில் அதிக அன்புண்டு. ஆனால் யாரையும் வெறுப்பது கிடையாது.

தன் பிள்ளைகள் நல்லவர்களாக வேண்டும். ஒற்றுமையுடன் இருக்கவேண்டு மென்பதல்லவா விருப்பம். அதுபோலவே எல்லாம் வல்ல இறை வனுக்கும் நாம் எல்லோரும் ஒற்றுமையாய் இருப் பதே விருப்பம்.

சகோதர பாவம் ஏற்படும்போது பொறாமை என்னும் தீயகுணம் அடியோடு நம்மை விட்டு அகல்கிறது. பிணியும் அதனாலுண்டாகும் தீமை களிலிருந்து நமமை இரட்சித்துக்கொள்கிறோம். ஒருவரைத் தூஷித்து அவரைப்பற்றி புறம்

கூறுதல் என்றதுற்செய்கையிலிருந்து நாம் தப்பு கிறோம். பிறரை வஞ்சித்து அவர்களுடைய சொத்தைக் கொள்ளையடிக்கிற கெட்ட குணத்திலிருந்து அது நம்மை விடுவிக்கிறது.

பிறரை இகழாது, அவரை அன்புடன் நேசித்து, அவர்களுக்குத் தங்களால் கூடிய மட்டும் உதவி செய்வது சற்கருமங்கள் எல்லாவற்றிலும் சிறந்தது. உதாரணமாக ஒரு சிறு சரித்திரம் எழுதுகிறேன்.

ராதாவும், தாராவும் ஒரே ஊரில் பிறந்து வளர்ந்தவர்கள். ராதா ப்ரம ஏழை; தாரா மிகுந்த செல்வவந்தரின் பெண். இருவரும் ஒன்றுப்பட்டத்தவர்கள்; சமவயதுடையவர்கள். தவிர படிப்பிலும், அழகிலும், புத்திசாலித்தனத்திலும் ஒருவர்க்கொருவர் தாழ்ந்தவர்களல்லர். தம்முள் ஒருத்தி ஏழை என்றும், மற்றவள் பணக்காரி என்றும், அவர்களுள் கொஞ்சமேனும் வித்தியாசமில்லை. இவர்கள் இருவருக்கும் விவாகமும் நிறைவேறிற்று. கூடிய சீக்கிரம் ஒருவரை யொருவர் விட்டுப்பிரிந்து தங்கள் கணவன்மாருடன் செல்ல வேண்டியதாயிற்று. தாங்களிருவரும் பிரிந்துபோக நேரிட்டதை எண்ணி யெண்ணி அதிகம் வருந்தினர்கள். ஆயினும் என்ன செய்வது? அவர்கள சரீரம் பிரிந்தார்களே ஒழிய அவர்கள் மனம் பிரியவேயில்லை. அந்தஸ்துக் கேற்ற, தாரா நல்ல பணக்காரனை மணந்திருந்தாள். அவள் கணவன் ஒரு வக்கீலாக இருந்தான். அவள் ஓர் பெரிய அழகிய மாளிகையில் சகல ஐசுவரியத்துடனும் வாழ்ந்து வந்தாள். ராதா ஏழைப்பெண்ணைதால் ஓர் நடுத்தரமான குடும்பத்தில் வாழ்க்கைப் பட்டிருந்தாள். அவள் புருஷன் பள்ளிக்கூடத்தில் 90 ரூபாய் சம்பளத்தில் உபாத்தியாயராக இருந்து வந்தார். நம் ராதா வெகு சந்தோஷத்துடன் இல்லறம் நடத்தி வந்தாள். நமது சினேகிதிகளிருவரும் ஒரே காலத்தில் தங்கள் பிறந்தகம் செல்வதென்று கடிதமூலமாக ஏற்பாடு செய்துகொண்டார்கள். அதன்படியே தங்கள் தாயார் வீட்டிற்கு ஏககாலத்தில் வந்து ஒருவரை யொருவர் சந்திக்கலானார்கள். "பிரிந்தவர் கூடினால் பேசவும்வேண்டுமோ?" என்றபடி, அப்பொழுது அவர்களடைந்த மகிழ்ச்சியை என்னவென்றுகூறமுடியும்! அவர்கள் சந்தோஷத்திற்கு எல்லையுமுண்டோ! அவர்களுக்கு எப்பொழுதும் தனித்துப் பேசுவது தான் பிரியம். ஆகையால் அவர்கள் மாலைநேரங்களில் உலாவச் சென்றால் தனித்துப் போய் ஓர் ஏகாந்தமான இடத்தில் உட்கார்ந்து கொண்டு பேசுவார்கள். ஓர் நாள் இவ்விரு சினேகிதர்களும் மாலை நேரத்தில் ஓர் ஆற்றின் கரை ஓரமாக உட்கார்ந்து வெகு குதூகலமாக சம்பாஷித்துக் கொண்டிருந்தார்கள். தென்றல்காற்று மெல்லென வீசினபடியேயிருந்தது. இவ்விரு சினேகிதர்களையும் காண்பதற்காக ஆதித்தன் தனது செங்கிரணங்களை மேற்கடலில் மறைத்தான். பட்சி சாலங்களும் தத்தம் கூட்டை நோக்கிச் சென்று கொண்டிருந்தன. இந்த அழகு புதுமான மாலை நேரத்தில் இவ்விரு சினேகிதர்களும் தாங்கள் ஒருவரை யொருவர் விட்டுப்பிரிந்த காலங்களில் சம்பவித்த விஷயங்களையிட்டுப் பேசிக்கொண்டும், தாங்க முடியாத அன்பினால் ஒருவரை யொருவர் தழுவிக் கொண்டும் இருந்தார்கள். இப்படியிருக்கும் நேரத்தில் தாராவானவள் ராதாவை நோக்கி "ஆருயிர்த் தோழியே! நாம் ஒருவரை யொருவர் பிரிந்து ஆறுமாசங்களுக்கு மேலாகிறது. என் குடும்பத்தில் எவ்வளவோ சுக துக்கங்களிருந்தாலும் உன்னுடைய பிரிவானது எனக்கு அதிக விசனத்தை உண்டாக்குகிறது" என்றாள்.

ராதா:— ஆம் தாரா! எனக்குமப்படியே தானிருக்கிறது. நாமிருவரும்ஒரே ஊரிலிருந்தால் நமக்கு அது மெத்தவும் நன்றாய் இருக்கும். என்ன செய்யலாம்! அதைப்பற்றி யோசிப்பதில் என்ன பயன்? அது போகட்டும்! உன் குடும்ப விஷயம் எப்படி? உன் புருஷனின் குண விசேஷங்கள் உனக்குத் திருப்திகரமாக இருக்கின்றனவா?" என வினவினாள்.

தாரா:— "என் பிரிய சகி! நீ வினவியது சரியான கேள்வியே. தவிர இது சமய சந்தர்ப்பத்திற்கு ஏற்றதாகவுமிருக்கிறது! ஆனால் நீ முதலில் இதே கேள்வியை எடுத்துக்கொண்டு விடையளி. பின்பு நான் சொல்லுகிறேன்,, என்றாள்.

ராதா:- "சரி அப்படியே! எனக்கு இரண்டு நாத்தனாரும், ஒரு மைத்துனருமுண்டு. என் புருஷன் வீட்டார்கள் அதிக டணக்காரர்களில்லை. என்மாமனும் மாமியும் மிகவும் நல்லவர்கள். ஆகையால் நானும் கூடிய வரையில் அவர்களது மனம் நோகாமல் நடந்து வருகிறேன். இது வரையில் என்னையாரும் கடிந்து பேசினதேகிடையாது. ஆதலால் பொதுவில் எங்கள் குடும்பம் சந்தோஷமுள்ளதாக இருக்கின்றது" எனக் கூறினாள்.

தாரா:— (இதைக் கேட்டு மனமகிழ்ந்து) "என் அன்பு மிக்க ராதா நீ இம்மட்டும் சந்தோஷமாக இருப்பது எனக்கும் மகிழ்ச்சியைக் கொடுக்கிறது; உன்னைப் போலவே நானும் இருக்கிறேன்." எனச் சுருங்கச் சொல்லி முடித்து மேலே பேசமாட்டாதவளாய், "நாம் வீட்டிற்குப் போவோம்வா" வென்றழைத்தாள்.

ராதா:— (அகத்தின் அழகு முகத்தில் தெரியும் என்பதைத் தாராவிடமிருந்து வெகு எளிதில் உணர்ந்து கொண்டு மிகவும் வருந்தினவளாய்)

"தாரா! உன் விஷயத்தை உள்ளது உள்ளபடி எனக்குச் சொல்லாவிடில் நான் இந்த இடத்தை விட்டு ஒரு அடி கூட எடுத்து வைக்கப்போவதில்லை. இரவு முழுவதும்வேண்டுமானால் நான் இவ்விடமேயே இருக்கத் தயாராக இருக்கிறேன். என் பிரிய தோழியின் மனக்கவலையை அறிந்து கொள்வதை விட எனக்கு வேறெதுவும் பெரிய காரியமல்ல" என வெகு உறுதியுடன் சொன்னாள்.

தாரா:— "என் ராதா! நீ என் என் விஷயத்தில் அதிகம் தலையிட வேண்டும். எனக்கு உன்னிடம் சொல்லக் கூடாத விஷயம் என்ன இருக்கிறது? என் விசனம் என்னுடன் இருக்கட்டும். அதை நீ பகிர்ந்து கொள்ளவேண்டாம். ஆகையால் போகலாம் வீட்டிற்கு வா" என்றாள்.

ராதா:— "முடியாது, முடியாது. நான் உன்னைப்பற்றி ஒரு விஷயம் கேள்விப்பட்டேன். அது எனக்குத் தெரியும். உன்னிடமிருந்து சரியான உண்மையைத் தெரிந்து கொள்ளவேண்டும். ஆகையால நீ என்னிடம் மறைக்க முடியாது. சொல்லித்தான் ஆகவேண்டும்" என்று வெகு பிடிவாதத்துடன் சொன்னாள்.

தாரா:— இனிச் சொல்லாமல் வேறு வழியில்லை எனக்கருதி சற்று வருத்தத்துடன் கூறலானாள். "ராதா! உன்னைப் போலவே என் மாமி வீட்டார்கள் கலலவர்களாக அமையப் பெற்றேன். எனக்கு வீட்டில யாதொரு வேலையும் கிடையாது. என்னைச் சினந்து பேசுபவரும் யாருமில்லை. ஆனால் என் புருஷனைப் பற்றி பெரிய தோர் கவலை இருக்கிறது அது அவருடனும் என்னுடனும் நில்லாமல் ஓர் குற்றமற்ற பெண்ணையும் பாதிக்கிறது. எனைப் பொறுத்தமட்டில நான் என்ன வேண்டுமானாலும் தாங்கிக் கொள்வேன். சரியான யோசனை இல்லாமல காரியங்கள் நடந்திருக்கின்றன. இதனால் என்மனம் சந்தோஷமற்றிருக்கிறது. அதற்குப் பரிகாரமும் காணேம். ஆகையால என் ஜன்ம முள்ள வரையில் இது என்னைப் பாதிக்கும்" எனக கூறி முடித்து "நான் எல்லாம் சொல்லியாய்விட்டது ராதா! இனி எழுந்திரு போவோம்" என்றாள்.

ராதா:— (வெகு கவனமுடன் கேட்டுவிட்டு) "தாரா, நான் வரமாட்டேன். நீ சரியானபடி விஸ்தரித்துச் சொல்லு; அரை குறையாய்ச்சொல்வதில் என்னபயன்? நீ கவலை இல்லாமல் நிஜத்தைச் சொல்" என்றாள்.

தாரா:— "என் முழு மனதையும் அன்பால் கொள்ளை கொண்ட என் பிரிய ராதே! எனமமா என்னைச் சோதிக்கிறாய்? என் கஷ்டங்களை உன்னிடம், சொல்லாமல் நான் யாரிடம் செல்வேன். நான் இனி எதையும் மறைக்கமாட்டேன்" எனச் சொல்லி அவளை அன்புடன் அணைத்தத் தன் துயரத்தைச் சொல்ல ஆரம்பித்தாள். அப்பொழுதே அவள் குரல் தாழ்ந்துவிட்டது. அவள் வதனம் ஒளியிழந்து குன்றலாயிற்று. இதனைக் கண்ணுற்ற ராதா, தன் அருமைத் தோழியின் மெல்லிய கரங்களைத் தன் கையால் பற்றிக் கொண்டு அவள் கண்ணீரையும் துடைத்து, "நீ என் அம்மா இவ்வளவு அதைரியப்படவேண்டும்? உன் மனதைச் சரிப்படுத்திக் கொள் என்றாள்.

பின்பு தாரா, ஒருவாறு மனதைத் திடப்படுத்திக் கொண்டு சகுந்தலையைக் கூறலானாள். "என் புருஷன் சென்னையில் சட்டப் பரீட்சைக்குப் படித்துக் கொண்டிருக்கும் சமயம் சுதர்சனன் என்றொரு நேசிதர் அவருக்குண்டு. இவர்களிருவரும் அதி ஒற்றுமையாக இருந்து வந்தார்கள். சுதர்சனனுக்குச் சகுந்தலா என்றொரு சகோதரி இருந்தாள். அவள் வெகு புத்திசாலியாகவும், கண்டோர் மெச்சத் தக்க கட்டழகியாகவுமிருந்தாள். சுதர்சனன், என் புருஷனை அடிக்கடி தனது வீட்டிற்கு அழைத்துச் செல்வதுண்டு. இப்படியாக இருக்கும் சமயம் சகுந்தலாவுக்கும் என் கணவருக்கும் அதிக நட்பு ஏற்பட்டது. அந்த நட்பானது, கொஞ்ச நாட்களால் காதலாக மாறிற்று. நான் உன்னைவிட வேறொருவரையும் மணப்பதில்லையென்று சதியும் செய்திருந்தார். ஆனால் இது விஷயம் என் கணவன் தன் தாய் தந்தையருக்குத் தெரிவிக்கவில்லையாதலால், குற்றமற்ற அவர்கள் ஒன்றுமே அறியாதவர்களானார்கள். அப்பெண்ணுக்கு இப்பொழுது வயது 19. சகுந்தலாவைக் கலியாணம் செய்யப்போவதாகத் தன் பெற்றோரிடத்தில் சொல்ல அஞ்சி அவர் மௌனம் சாதித்துவிட்டார். தானே முன் நின்று விவாகத்தை முடித்துக்கொள்ளவும் தைரியமற்றவராய் விட்டார். பிறகு நாளடைவில் எங்கள் கலியாணம் என் மாமன் மாமியாரால் நிச்சயம் செய்து நடத்தப்பட்டது. வெகு மன வருத்தத்துடனும் வெட்கத்துடனும் என்னை இவர் மணவியாக்கிக் கொண்டுவிட்டார். சகுந்தலாவுக்கும், தன் நண்பனுக்கும் கொடுத்த உறுதி வாக்கு எங்கே? நடந்திருக்கும் சாரியமென்ன? நியாயம் எங்கே? ஆதலால் இவர் தான் செய்த மகத்தான தப்புக்காகத் தன்னைத் தான் வெறுத்துச் சகா ஆழ்ந்த நிந்தனையுள்ளவராகவேயிருக்கிறார். என கலியாணச் சங்கதியை அறிந்த அப்பெண் மிகவும் மனமுடைந்து ஆழ்ந்த துயரத்துக்குள்ளானாள். அதன் காரணமாகத் தன்னால் படிக்கமுடியாதெனக்கருதி அவ்வருஷம் படிப்பை நிறுத்தி விட்டாளாம். சுதர்சனனும் தன் நண்பனுடைய

தவறை எடுத்துக் காட்ட மனம் பொறுதவனாய்ப் பொறுமையுடன் இருந்து விட்டான். நாளாக ஆக என் புருஷன் அதிக கவலையில் ஆழ்ந்து விட்டார். என்னிடம் அவர் அன்பாயிருக்கப் பிரயாசப் பட்டாலும் அவருடைய மனமானது அவரைத் தடுக்கிறது. குற்ற மற்ற என்னை அவர் வெறுத்துத் தள்ளவும் முடியாமல் தவிக்கிறார். நான் கவலைப்படுவதும் அவருக்குச் சகியாது. இத்தகைய கஷ்டங்களால் அவர் தவிக்கிறார். யாரிடமும் அவர் சந்தோஷமாகப் பேசினதே யில்லை. சகுந்தலாவோ வெகு சீக்கிரத்தில் மன்மதேறியவளாய் அடுத்தவருஷமே படிக்க தொடங்கி விட்டாள். அவள் கொஞ்சமும் மனந்தளரவில்லை. அவளுக்குத் தன்னை விட்டு என்னை மணந்ததற்காகக் கொஞ்சமேனும் கவலையில்லையாம். "ஒருவர் தன்னால் செய்யக் கூடாத காரியத்தை ஏன் செய்வதாக யோசனையின்றிச் சொல்லிக்கொள்ள வேண்டும்? தைரியமில்லாத ஒருவர் சற்றுக் கடினமான வேலையில் ஏன் அவசரப்பட்டுப் புத்தியைச் செலுத்தி அதில் வலுவில் தலையிட்டுக்கொள்ள வேண்டும்? பின்னால் முடியாமல் ஏன் மனம் வருந்திக் கவலை கொள்ளவேண்டும்? எனச்சாந்த மாகத்தன் அண்ணனிடம் கூறினாளாம். வேறொரு வரன் வந்து அவளை மணம் செய்ய விரும்பிக் கேட்டானும். அவள் தன் சகோதரனால் இதை யறிந்தும் சற்றும் அதற்குச் செவிசாய்க்காமல் தன் வாழ்நாட்களை தனிமையாகவே கழிக்கப்போவ தாகக் கூறிவிட்டாள். சிலவிஷயங்களில் புருஷர்களைக் காட்டிலும் ஸ்திரீகளே திடமான புத்தி உள்ளவர்களென்று நான் நினைக்கிறேன். என்ன இருந்தாலும் அவள் மனதில்தான் முன் கொண்டுள்ள அன்பு இருக்குமல்லவா? இவைகளெல்லாம் என் புருஷனால் எனக்கு அறிவிக்கப்பட்டது. என் விவாகத்துக்குமுன்பு நான் கேள்விப்பட்டிருந்தால் இதற்கு உடன்பட மாட்டேன். யோசிக்குமிடத்து அவர்கள் சந்தோஷத்திற்கு நானல்லவோ தடையானேன். என்னைப்போலொத்த ஓர் பெண்ணின் துயரத்துக்கும், என் புருஷனின் கவலைக்கும் நானே காரணவதி. நான் மரணமடைந்தாலாவது அவர்கள் தம்பதிகளாய்ச் சந்தோஷமாக இருப்பார்களென்று எனக்கு உறுதி கிடைத்தால் நான் அதற்கு வழிதேடிக் கொள்வேன்" எனக்கூற, "என் பிரியராதே! என் அன்புக்குறைவிடமே! உன்னிடம் நான் எதையும், மறைக்காமல் அப்படியே சொல்லிவிட்டேன். இதற்கென்ன செய்யலாம் சொல்" என மொழிந்து பெருமூச்சு விட்டவளாய் வெகு கவலைப்புடன் அவள் மடியில் தன் தலையைவைத்துப் படுத்துக் கொள்ளலானாள்.

(தொடரும்)

—ஸரோஜா.

சங்கீதம்

கர்த்தா இராகத்தின் நிர்ணயம்.

அனுபவ பிரமாணமாக, ஒரு ஆதார சுருதியில், ஒரு ஸ்தாயியில் இயற்கையாயுள்ளது 12 சுரஸ்தான மென்பதும், அதில் தொனிப்பது 12 சுரங்களென்பதும், அதில் சஞ்சரிக்கப்பட்ட சுரம், ஸரிகமபதநி என்னும் சங்கேதாட்சரம் ஏழே என்பதும் சங்கீதக் கலையில் உணர்ச்சியுள்ள ஒவ்வொருவரும் அறிந்த உண்மையே யாகும்.

ஒரு சுருதியின் ஆதாரத்தில் ஆரம்பிக்கும் ஸ எனும சட்ஜமம், ஸரிகமபதநிஸ் என ஆரோகண கெதியாயும், ஸநிதபமகரிஸ என அவரோகண கெதியாயும், வருவது ஒரு சம்பூரண மூர்ச்சையாகிறது. இப்படியாகும் ஒரு சம்பூரண மூர்ச்சையே ஒரு கர்த்தா இராகமாகிறது. இராகம் என்பது பலவித சுர சஞ்சாரங்களினால் அலங்கரித்கப்பட்டு, சகல ஜீவராசிகளின் சித்தங்களையும் ஆனந்தப்படுத்தி வசீகரிக்கும் தன்மையுடையது.

மேற் சொன்னபடி 12, சுத்தம் பிரதி சுரங்களினுமிருந்து சம்பூரண மூர்ச்சையான கர்த்தா இராகங்கள் 32 உண்டாகின்றன. இதில் சுத்த மத்யம ராகம் 16-ம், பிரதிமத்யம ராகம் 16-ம் ஆகும்.

ஒரு ஸ்தாயில் உள்ள 12 ஸ்தானங்களுக்கு விபரம்.

1. சட்ஜமம். 2. சுத்தரிஷபம். 3. பிரதிரிஷபம். 4. சுத்தகாந்தாரம். 5. பிரதிகாந்தாரம். 6. சுத்தமத்யமம். 7. பிரதிமத்யமம். 8. பஞ்சமம். 9. சுத்ததைவதம். 10. பிரதைவதம். 11. சுத்தநிஷாதம். 12. பிரதிநிஷாதம. என பன்னிரண்டாகும். மேலும், எந்த தேச சங்கீத அமைப்பிலும், எந்த தேச வாத்திய அமைப்பிலும் 12 சுரஸ்தானங்களே அமைப்பெற்றிருப்பது யாவரும் கவனிக்கத்தக்க முக்யம் வாய்ந்ததாகும்.

குறிப்பு.—நான் இவ்விவரங்களை வெளியிடுவதின் நோக்கம், உயர்வாகிய சங்கீதக்கலை, அந்தந்த

காலங்களில் பலவித மாறுபட்ட அமைப்பில் வெளியிடப்பட்டு வந்தமையாலும், ஒரு ஸ்தாயில் உள்ள சுரஸ்தானம், பன்னிரெண்டா? அல்லது பதினாறென சந்தேகத்திலிருப்பவர்களின் சந்தேகத்தைப் போக்கவும், சங்கீதத்தை விரும்பும் அனைவரும் இவ்விவரங்கள் அறிய வேண்டுமென்றும், பொதுவில் உண்மையான கலை வளர்ச்சிக்காகவே யாகும். நான் எழுதி வரும் மேல்கண்ட விஷயங்களில், யாருக்கேனும், பிழையிருப்பதாய்த் தோன்றினாலும், அல்லது விளங்காமலிருந்தாலும், அப்படிப்பட்டவர்கள் நேரிலோ, எழுத்துமூலமாகவோ, தங்களின் அபிப்பிராயத்தை என்னிடம் கேட்டால், தக்க ஆதாரங்களுடன் அவர்களுக்கு பதிலளிக்கத் தயாராயிருக்கிறேனென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

Flute Natesan

- மனக்கவலை பலக்குறைவு -

மனிதர் வாழ்க்கையிற் கவலை என்பது இயல்பாகவே வந்து ஒவ்வொருவரையும் வருத்தும் பொல்லாத கொடியநோயாகும். தாம் தொடங்கிய முயற்சி நல்லாய் முடியுமோ தீதாய் முடியுமோ என்று கவலை; தம் தாய் தகப்பன் சகோதரர் இனத்தவர் நோயால் துன்பப்படுதலைப் பார்த்து அவர் சாவாரோ பிழைப்பாரோ என்று கவலை; இனி, தமக்கு வயது முதிர்ந்து கிழத்தன்மை வரும்போது தம்மை பாதுகாத்துக் கொள்ளுதற்கு மிகுந்த பணத்தைச் சேர்த்துக் கொள்ளவில்லையே என்று கவலை; தம் மனைவி மக்கள் முதலானோர் நல்லொழுக்கம் உடையவராய்ச் சீர்திருந்திவருவாரோ சீர்திருந்தாரோ என்றும், இவ்வாறு இன்னும் பற்பல வகையாய் ஒவ்வொருவரும் கவலையடைந்து மனம் வேதனைப் படுதலை, யாம் கண்ணெதிரே காண்கின்றோம். இப்படிக் கவலைக்கு இடங்கொடுக்குந்தோறும் மனிதனுக்கு உள்ளக் கிளர்ச்சியும் வரவரக் குறைந்து போகிறது; முயற்சியும் குன்றிப் போகின்றது. இவை குறையவே மனநோய் அதிகப்பட்டுப் பின் எவ்வகை மருந்தினுந் தீராதாய் உயிரைக் கொள்ளை கொண்டு போய் விடுகின்றது. ஆகையால் இப்பொல்லாத கவலைநோயை உள்ளத்தில் தலைகாட்டாதவாறு செய்து கொள்ள வேண்டும். கொஞ்சம் ஊன்றி யோசித்துப் பார்த்தால் எவருங் கவலையடைய இடமே இல்லை. இருண்ட ஓர் இராக் காலத்து ஆகாயத்தை நிமிர்ந்து பாருங்கள்! அங்கே ஆற்று மணலினும் அளவிடப்படாத நட்சத்திரக் கூட்டங்கள் காணப் படுகின்றனவல்லவோ? அந்த நட்சத்திரங்களுள் ஒவ்வொன்றும் நாம் இருக்கும் இந்நிலவுலகத்தினும் எத்தனையோ மடங்கு பெரியனவாகும். அந்த நட்சத்திர மண்டலங்களில் இருந்து பார்ப்பவர்களுக்கு நமது இப்பூமி ஒரு சிறு கடுகளவு கூடத் தோன்றுமோ என்பது சந்தேகம். இவ்வளவு சிறிதாகிய எமது பூமியில் இருக்கும் அளவில்லாத சீவகோடிகளில் நாமும் ஒரு சிற்றுயிர். இந்தச் சிற்றுயிரால் உலகத்தில் என்ன பெரிய காரியஞ் சாதிக்க முடியும்? இவன் ஒன்று நினைத்தால் முடிவது வேறொன்று யிருக்கிறது. இவன் ஒன்றும் நினையாதிருக்கையில் எத்தனையோ இவனை வந்து சூழ்ந்துகொள்கின்றன. நாளைக்கு இதுசெய்வோமென்று எண்ணிப் படுத்தவன் மறு நாள் உயிர் பெற்று எழுந்திருப்பதே நிச்சயமாயில்லை. மனிதனுடைய அறிவால் எவ்வளவோ திறமையாகவும் ஒழுங்காகவும் அமைக்கப்பட்ட கட்டிடங்களும், சிறந்த சிகரங்களும், ஒரு நிமைப் பொழுதில் பூமி அதிர்ச்சியினால் நொறுங்கிக் கீழ் விழுந்து அழிந்து போகின்றன. இன்றைக்கு நிலமாயிருப்பது நாளைக்கு நீரினால் மூடப்படுகின்றது. நீர் நின்ற இடங்களில் நிலங்கள் தோன்றுகின்றன; காற்றினாலும் மழையினாலும் உண்டாகும் மாறுதல்கள் கணக்கற்றன. சூரிய சந்திரர் இயக்கங்களால் உண்டாகும் மாறுதல்களும் எண்ணிறந்தன. இவற்றை எல்லாம் மனிதன் தன் சிற்றறிவால் சிறிதேனும் மாற்ற வல்லவனா? இல்லையே! அப்படியிருக்க மனிதன் பின் வருவதைக் குறித்துக் கவலைப் பட்டு மாய்வது ஏன்? இவனுடைய வல்லமைக்கு அடங்கி நடவாத நிகழ்ச்சிகளைப்பற்றி இவன் கவலைப்பட்டு என்ன செய்வது?

அப்படியானால் நாம் முயற்சி செய்வதற்கே இடம் இல்லாமல் வீணே நாட் கழிக்க வேண்டிவருமே பெனின், அப்படியல்ல; தம் நன்மையின் பொருட்டும், பிறர் நன்மையின் பொருட்டும் ஒவ்வொருவரும் நன் முயற்சி செய்ய வேண்டியது அவசியமான கடமையேயாம். என்றாலும் அந்த முயற்சியினால் வரும் பயன் நன்றாகுமோ தீதாகுமோ என்று எண்ணி எண்ணி மனம் ஏங்குதல் சிறிதும் நன்மையுடையதன்று. "எண்ணித் துணிக கருமம் துணிந்தபின் எண்ணுவமென்பதிழுக்கு" என்னும் திருவாக்கின்படி ஒரு காரியத்தைச்

செய்யத் தொடங்கும் போதே அது தமக்கும் பிறர்க்கும் நன்முகுமாறு வைத்து நன்முய் போகித்துச் செவ்வனே முயலல் வேண்டும். எடுத்துச் செய்த அந்தநன்முயற்சியினால் இன்னது வருமோ வராதோ வென்று ஐயமுற்றுக் கவலையடைதல் ஒன்றே யாரும் விரும்பற்பாலதன்றும். அடுத்த நிமிஷத்தில் வருவது இன்னதென்று நம்மால் நிச்சயித்தல் அரியதாகலின், பின்பு யாது வருமோ என நினைந்து மனங்கலங்குதல் தக்கதல்ல. தன் அறிவுக்கு எட்டிய அளவு தான் தொடங்கிய முயற்சியினால் இவ்வளவு நன்மை வரும் என்று செவ்வையாக முயன்று, பின்தான் நினைத்தவாறுக நன்மையே வந்தாலும் வரும். அல்லது அவ்வாறின்றித் தான் எண்ணியதற்கு முற்றும் மாறுனது வரினும் வரும். அவ்வாறு வந்தால் அதனை இவன் நினைந்து நினைந்து நெஞ்சம் புண்படுதல் ஆகாது. தன்னால் ஆகுமட்டும் நன்முயற்சியே செய்தவன் அம்முயற்சி பாழ்படக்கண்டால் அதனைத் தன் குற்றமென நினையாமல் அது ஊழ்வலியின் தன்மையென்றும், கடவுள் செயலென்றும் உணர்ந்து அமைதி பெறுதலே தனது ஆன்ம சக்தியை மிகுதிப்படுத்தற்கு உரிய மெய்க் நெறியாகும். எனினில் மனங் கலங்குதற்குரிய சம்பவங்கள் சம்பவித்த காலத்தில் அவற்றை ஒரு பொருட்படுத்தாமல், மனத்திட்பத்தோடு நிற்றல் சாமானிய மனித சுபாவத்திற்கு மேற்பட்ட தெய்வ சுபாவமே யாகுமன்றே! வியாபார நுட்பங்களெல்லாம்செவ்வையாகத்தெரிந்த ஒருவன்மலிந்த ஓர் இடத்திலிருந்து ஒரு சரக்கைத் தன் கப்பலில் ஏற்றுவித்து மிகுந்தவிலைக்கு விலைப்படும்வேறொரு நாட்டுக்கு அதனைத் தக்க காலத்தே அனுப்புவித்தான். இவன் செய்த இம்முயற்சியில் ஏதும் பழுதேயில்லை. கடலில் செல்லும் இவனது கப்பல் இடையே எதிர் பாராது வந்த சூறைக் காற்றில் அகப்பட்டுக் கடலுள் அமிழ்ந்திப்போனதாயின் அதற்கு இவன் என்ன செய்வான். தனது அறிவுக்கும் வல்லமைக்கும் மேற்பட்டுத் தோன்றிய அந்தச் சம்பவம் கடவுள் செயலால் ஆயதென எண்ணி மனது அமைதி பெறுவானுயின் அவன் உலக வாழ்க்கையில் உழல்பவனேயாயினும், அவனே முற்றுந் துறந்த முழுத் துறவியாவான்; மேலும், தான் வியாபாரஞ் செய்யத் துவங்குங் காலத்தும் இது நன்முய் முடியுமோ தீதாய் முடியுமோ என்று ஐயமுற்றுக் கவலைப்படுவானுயின், அவன் முயற்சியைச் செவ்வையாய்த் தொடங்கி நடத்தமாட்டாமல் இடை முறிந்து போவான்; நன் முயற்சியைத் துவங்கி நடத்தும் ஒருவன் அம்முயற்சி யாதாய் முடியுமோ என்று கலங்காதிழித்தலே பல வகையாலும் இம்மை மறுமைப் பயன்களைப் பெறுதற்குரிய உபாயமாகும்.

இவ்வுபாயத்தை நன்கு உணர்ந்த ஆங்கில அமெரிக்கர் தாம் துவங்கி நடத்தும் பெரிய வியாபாரங்களிலெல்லாம் அவை பின்னுல் எவ்வாறுய் முடியுமோ என்பதைப்பற்றிச் சிறிதுஞ் சிந்தியாமல், தாம் செய்யும் முயற்சிகளை மாத்திரம் திருத்தமாயச் செய்கின்றார்களெனவும், அதனுல் அவர்கள் வியாபாரிகளைப் பார்க்கினும் மிகுந்த லாபத்தை அடைந்து பெரிய செல்வர்களாய் இனிது வாழ்கின்றார்களெனவும் அறிகின்றேம்.

இப்படியே தம்மார் நோயால் வருந்தும்போது அவர் எவ்வாறுவரோ என்று கவலைப்பட்டுக் கலங்காமல், அவரை அன்புடன் பார்த்து ஆறுதலான சொற்களைச் சொல்லித் தக்க பரிகாரங்களையும் செய்துவரல் வேண்டும். இவ்வாறு செய்வதை விடுத்து இவர்க்கு வந்தநோய் தீருமோ தீராதோ என்று கவலையுறறுக் கலங்கி அழுது வருத்தப்படுதல் நோயுற்றவருக்கு அந்நோயை மிகுதிப்படுத்துதற்கே இடமாகுமல்லாது வேறு நன்மையின்றும். நோய் கொண்டவருக்குப் பக்கத்தே இருந்து வருந்துதல் மிகவும் தீங்கு பயப்பதேயாகும். ஏனெனில் தம்பக்கத்தே இருந்து வருந்துவதை நோயாளிகள் பார்க்குந்தோறும் தாமும் வருத்தப்பட்டு மன்னங் கலங்குவர். மன்னங் கலங்கக் கலங்கப் பிராண சக்தி குறையும்; அது குறையவே நோய் பெருகி அவரைச் சீக்கிரத்தில் இறக்கச் செய்யும். ஆகையால் நோய் கொண்டவர் பக்கத்தே செல்வோர் அந்த நோயின் கொடுமையை மிகுத்துப்பேசாமல் "இந்த நோய் என்ன செய்யும்; இது நாளைக்கே இருந்த இடந் தெரியாமல்மறைந்து போகும்" என்று உள்ளக் கிளர்ச்சி அவருக்கு உண்டாகும் வண்ணம் தீரத்தோடு பேசல்வேண்டும். மனக்கிளர்ச்சியினை விளைவிக்கும் இச்சொற்கள் செய்யும் நன்மை, மிக அரிய மருந்துகளுஞ் செய்யமாட்டா.

இனி அளவுக்குமேல் ஆசைப்பட்டு, அப்பேராசையால் முயன்று, விரைவில் அழிந்தாழிந்தவர் பலர். மரப் பொந்துகளிலும், கிளைகளிலும் வசிக்கும் பறவைகளும், காட்டிலும் மலையிலும் வசிக்கும் விலங்கினங்களும் "நாளைக்கு என்செய்வோம்" என்னுங் கவலையுடையனவல்ல. அவைகளெல்லாம் தத்தமக்கியன்ற முயற்சி செய்து தம் உயிர் வாழ் நாட்களை இனிது கழிக்கவில்லையா? அதுபோல ஒவ்வொருவரும் தம்மால் இயன்றவரையில் நல்ல வழியிற் பொருள் தேட முயலல் வேண்டும். தம்முயற்சியினால் மிகுந்த பொருள் தொகுக்க ஏலாவிட்டால், கிடைத்தமட்டில் மன அமைதி பெறுதலே பெரிதும் விரும்பத் தக்கதாம். "செல்வம் என்பது சிந்தையின் அளவு" இதனை விடுத்துப் பேராசைப்பட்டுக்

கவலை கொண்டு தம் அளவுக்கு மிஞ்சி அல்லும் பகலும் இடைவிடாது பொருள் தேட முயல்வ ராயின் அதனால் அவருடம்பிலுள்ள கருவிகள் தேய்ந்து வலி குறையத் தாம் திரட்டிய பொரு ளைத் தாம் அனுபவிக்கும் முன்னரே இறந்து போவர். அருட்பெருங் கடலான ஆண்டவன், எல்லா உயிர்களையும் படைத்த இறைவன் அவை கட்கெல்லாம்படி அளவாமல் விடுகின்றனனே? அரு ட்பெருங்கடலான ஆண்டவன் எல்லா உயிர்களை யும் தான் குறித்த காலம் வரையிற் காப்பாற்ற இருக்கையில், மனிதர்கள் மாத்திரம் அவன் அரு ட்பெருந் தகைமையை நம்பாமல் தமக்குத் தம் மையே துணையாக நினைத்துக் கவலையுறுதல் எவ் வளவு அறியாமை.

இதனால் நாம் பொருள்தேடும் முயற்சியைவிட் டிருக்க வேண்டுமென்பது கருத்தன்று. யாவை முதல் எறும்பு ஈறான அத்தனைக்கும் படியளக் கும் ஐயன் என் முயற்சியை அறிந்து எனக்கும் படி அளவாது போகான் என்று ஒவ்வொருவ ரும் உளத்தில் உறுதி கொண்டு மகிழ்ந்து முய ல்வராயின், அவர்கள் பல நூறாண்டு பயன்பட இனிது வாழ்வர். அதனால் வாழ்க்கையில் கவலை களும்துன்பங்களும் இல்லாமல் ஒழிந்துபோகும்.

இனித் தம் மனைவி மக்கள் முதலாயினோரிட த்து மிகவும் அன்புடன் ஒழுகி அவர்க்கு நல்லறி வுகளையும் அடிக்கடி புகட்டி, நற் செய்கைகளி லும் அவர்களைப் பழகச் செய்து வந்தால் அவர் களைப் பற்றிச் சிறிதும் கவலையடைய வேண்டு வதே யில்லை. ஒரு குடும்பத்தில் தலைவனாய் இருப்பவன் எவ்வளவு நற்குணத்திலும், நல் ஒழு க்கத்திலும் மேம்பட்டுத் தோன்றுகிறானோ, அப் படியே அவனைச் சார்ந்தவர்களும் அவற்றில் மேம்பட்டுத் தோன்றுகிறார்கள். அவன் நல்லவனும் நற்செய்கை உடையவ னுமாய் இராவிட்டால் அவனைச் சார்ந்தவர்களும் அவனைப் போலவே ஆய்விடுகிறார்கள். ஒரு குடு ம்பத்தில் முதல்வனாயிருப்பவன் கள்ளனாய் திரு டுபவனாயிருந்தால் அவன் மனைவி மக்களும் பெரு ம்பாலும் திருடராகவே மாறிவிடுகிறார்கள். வேசி மார் வீட்டுக்குச் செல்லுந் தந்தையைப்பார்த்து த்தாமும்வேசியர் வீட்டுக்குச்சென்று கெட்ட புத ல்வர்கள்எத்தனைபேர்? கள்ளையும்மற்று பிராந்தி முதலிய மதுபானங்களையும் குடித்துப்பெருங் கு டியர்களானதம் தந்தைமாரைப் போலவே, தாமுங் குடித்துக்கெட்ட பிள்ளைகள்எத்தனை பேர்? வே ட்டையாடிப்பறவைகளையும், விலங்குகளையும் கொ ன்று, அவற்றின் இறைச்சியை விழுங்கியும், பொய் பேசியும், பிறரைவஞ்சித்தும், சூதாடியும் திரியும் தம் தகப்பன் மாரைப் பின்பற்றித் தாமும் அவ் வாறே தீய நெறியில் நடந்து கெட்ட இளைஞர்கள் எத்தனை பேர்? என்னேரமுங் கடுகடுத்த முக த்தோடும், வன் சொற்களோடும், தம் மனைவி மாரை ஏசியும், அடித்தும் கொடுமை செய்து, அவர்கள் தம்மை வெறுத்து அகன்று போய்ப் பிறரைச் சார்ந்து ஒழுகும்படி செய்யும் கணவன் மார்க்குங் கணக்குண்டோ? இப்படியே தன் குடும் பத்திற் சேர்ந்தவர்களையெல்லாம் கெடுத்துக் கெட் டவழியிற் புகுத்துவதற்கு, அக்குடும்பத்திற் தலைவனாயிருப்பவன் தான் காரணமாகும். அவன் தான் செவ்வையாக நடந்து காட்டுவானாயின் அவனைச் சார்ந்தவர்களெல்லாரும் தாமே நல்லவர் களாய் நடந்து நலம் பெறுவர். அதன் பொரு ட்டு அவன் சிறிதும் கவலைப்படுதல் வேண்டாம். "மனக்கவலை பலக்குறைவு." ஆதலால்நாம் இதைக் கூடியவரை ஒழித்து வீரமக்களாய் திடகாத்திர சரீரமும், மனவலிமையும் உடையவர்களாய், நம் நாட்டிற்கும், சமூகத்தினர்கட்கும் பயன் புரிவோ மாக.

பொ. உமா மகேசன்.
மலாக்கா.

- நம் நாட்டு மேயா -

அடுத்தக் கன நாட்களாக எங்கள் மகாநாடு கூடப்பட வில்லை. அதுவும் ஐக்கிய சங்க சஞ்சிகை செய்த நன்மைகளிலொன்று. யாவரும் தங்கள் தங்கள் வீடுகளிலிருந்தே தங்கள் அலு வல்களை முடித்துக் கொள்வார்கள். ஒழிந்த நேர ங்களில் மட்டும் சில வேளைகளில் சந்திப்போம்— ஆனதால் யாவரும் ஒருமித்துக் கூடுவதில்லை. ஒருநாளைக்கு அமிர்தம் வருவாள், ஒருநாளைக்குத் தங்கா வருவாள், இன்னொரு நாளைக்கு சுசிலா, வேறொரு நாளைக்கு ஞானமலர், இப்படியே சந்தி த்துச் ஷேமலாபங்களை விசாரித்து வருவோம். ஆனால் சரஸ்வதியும் நானும் மட்டும் அடிக்கடி சந்திப்பது வழக்கமாயிருந்தது.

அமிர்தம் ஆங்கிலங் கற்றவளென்று எங்கள் முந்திய சம்பாஷணைகளிலிருந்து நீங்கள் அறிவீர்

கள். சரஸ்வும் ஆங்கிலம் கற்றவளே. தங்கா தமிழ் மட்டும் நன்றாகக் கற்றவள். அமிர்தம் ஆங்கிலம் கற்றவளானாலும் அகங்காரமற்றவள். சிறிது மூற்கோபிதான்; ஆனாலும் "நீர்கிழிய எய்த வடுப்போல் ஆறுமே சீரொழுகு சான்றோர் சினம்." என்பது போல் கெதியில் ஆறிவிடுவாள். தன்குற்றத்தை ஒருவர் கண்டித்தால் உடனே அதை உணர்ந்து அதைத்திருத்தி நடக்கவேண்டுமென்ற ஒருமகத்தான குணமுடையவள். அவளது அந்த அருமையான குணமொன்றே நம்மாவரையும் அவள் மேல் அன்பு கொள்ளச் செய்தது.

இத்தகையான குணம் இருப்பது மகா அபூர்வம். ஒருவருடைய குற்றத்தைத்திருத்தவேண்டி ஒன்று சொன்னால் உடனே சண்டைக்குப் போய்விடுவார்கள் அல்லது அது அவர்கள் பொறுமையில் சொல்லுகிறார்கள் என்ற ஒரு குருட்டு நியாயம் சொல்லி வாயடியடித்து விடுவார்கள். அப்படியான திருட்டுப் புத்தி உள்ளவர்களே தற்காலத்தில் அனேகர் இருக்கின்றனர். அதனால்லவா உலகில் அனேக வம்பு தும்புகளும் வீண் சண்டை சச்சரவுகளும் சதா நிகழ்ந்து கொண்டிருக்கின்றன.

அமிர்தத்தின் இந்த அருமையான குணத்தினால் இந்தப்பக்கத்தில் இருக்கும் யாவருமே திருந்தி இருக்கிறோமென்றால் அது மிகையாகாது. ஞானமலரோ அமிர்தத்தின் குணத்திற்கு எதிர்மாறான குணமுடையவள். அவளைப்பற்றி இன்னொரு நாளைக்குச் சொல்லுகிறேன்.

ஒரு புதன்கிழமை பகல் இரண்டு மணிபோல் சரஸ்வதி எங்களவீட்டுக்குவந்திருந்தாள். நாங்கள் 'வழிகாட்டி'யாகிய சஞ்சிகையைப்பற்றியும், மற்றப் பத்திரிகைகளில் வெளியாகும் சீனயப்பானிய யுத்தத்தைப்பற்றியும், அதற்குமுன் நடந்த இத்தாலி அபிசீனிய யுத்த முடிவைப்பற்றியும் எங்கள் மனம்போன போக்கில் வெகு சுவாரஸ்யமாக வாக்குவாதம் செய்து கொண்டிருந்தோம்.

மன்னுயிரைப் போர்க்களத்தில் கொன்றுவீழ்த்தி
மலைமலையாய்ப் பிணக்குவியல் குவித்ததாலே
மன்னரெனப் பலர்வணக்கத் தருக்கி வாழ்ந்தோர்
மானிலத்தில் எத்தனையோ பேரைக் கண்டோம்

ஆனால் தன்னுயிரை மன்னுயிர்க்கே தத்தஞ் செய்து தருமநெறி தவறாது அகிம்சா தருமத்தை மேற்கொண்டு, எத்தனை தடவை சிறை வாசம் புகுந்து, முழுத்துண்டும் ஆளுமாக விளங்கும் காந்தியடிகளின் பெருமையாருக்குண்டு என்றாள் சரஸ்வதி.

ஆமாம் அரசென்றால் எத்தனை பயம் எங்கு பார்த்தாலும் எங்கு சென்றாலும் அவர்களைக்காவல் காக்க எத்தனை பேர் வேண்டும். ஆனால் காந்திரிஷிக்காக தம் உயிரைத் தத்தம் செய்ய எத்தனை உயிர் காத்து நிற்கின்றது. அவரே உண்மை மகான் என்றேன் நான்.

"வழிகாட்டியும்" கையுமாக மகா உக்கிர முகத்துடன் அமிர்தம் வந்துசேர்ந்தாள். நாங்கள் எங்கள் சம்பாஷணையை அத்துடன் நிறுத்தி அவளையே நோக்கினோம். பெண்களைப் பற்றி அதிலும் நம் சமூகப் பெண்களைப்பற்றி இவ்வளவு ஆபாண்டமாக ஒரு பெண் எழுதியிருப்பாளா? தன் சாதி மக்களையே பிறரறியப் பிற பாஷையில் ஒரு கற்றறிந்த பெண் தூற்றுவாளா? அந்தப் பெண்ணுக்குத் தேசாபிமானம், சமயாபிமானம் சிறிதாவது இல்லையோ என்று சொல்லிப் புஸ்தகத்தை என் பக்கத்தில் வீசி எறிந்தாள் அமிர்தம்.

அப்படி உனக்குக் கோபத்தை மூட்டக்கூடியதாக என்ன எழுதப்பட்டிருக்கிறது என்றாள் சரஸ்.

எனக்கு அமிர்தத்தின் குணம் தெரியுமானதினால் மெல்ல அவளை உட்காரச் சொல்லி விஷயம் என்னவென்று வினவினேன். ஒருவர் தேகில என்னைப்பற்றிப் பேசினால் நான் சட்டைபண்ணமாட்டேன். ஆனால் அன்னிய பாஷையில் யாவருமறிய நம் சமூகத்தினரையே ஒரு பெண் தூறுவதென்றால் தமிழ்ப் பெண்களில் ஒருவளாகிய நான் எப்படித்தான் சகித்திருப்பது? பாழாய்ப் போன அந்தப் பாஷையை என கற்றுக் கொண்டேனென்றல்லவா வயிற்றெரிச்சலாயிருக்கிறது. பாஷை தெரியாவிடில் ஒன்றையுமே அறியாமல் இருந்திருக்கலாமே! என்று படபடவென்று எரிந்து விழுந்தாள் அமிர்தம்.

அவள் குணம்தான் தெரியுமே கோபம் அடங்குமட்டும் இனி அவள் வாயிலிருந்து ஒன்றும் அறிய முடியாது. உண்மை பக்தனுக்கு ஒருவர் தன்னை ஏசுவதிலும் பார்க்க தன சமூகத்தையோ தேசத்தையோ பற்றி இழிவாகப் பேசினால் அது தான் நன்றாய் சுடுமாம். அது நம் சாதிக்குரிய ஒரு பெரிய குணம் என்றேன் நான்.

எங்கள் சாதிக்கு மட்டுமல்ல எல்லாச் சாதிக்கும் அது உரியதே. சிங்கப்பூரில் சீனர் பலர் சேர்ந்து நின்று யப்பான் கடைகளுக்குச் சாமான்கள் வாங்க வரும் தம் சகோதரரைத் தடை செய்கிறார்களாம். அப்படிக் கேட்காமல் போன ஒருவனை வாறாய் அடித்துப் போட்டுவிட்டார்களாம் என்றாள் சரஸ். அதுவும் ஒரு முரட்டுத் தேசபக்திதான் என்றேன் நான்.

இத்தனைக்கும் அமிர்தம் மறுபடியும் அந்தச் சஞ்சிகையையே எடுத்து வாசித்துக் கொண்டிருந்

தாள். அவளது சொற்களிலிருந்து கொஞ்சம் நாக்களும் யூகித்துக் கொண்டோமானாலும் மௌனமாக அவள் பேசும் வரையும் காத்துக் கொண்டிருந்தோம். எங்கள் வீடுகள் சேர்ந்தாப்போலிருப்பதாக முன் சொல்லியிருக்கிறேனல்லவா. அமிர்தத்தின் இரைச்சல் கேட்டு தங்கா ஓடிவந்தாள். முற்றத்தில் குழந்தையை வைத்துக் கொண்டு நின்ற சுசீலாவும் அஜ் என்ன இரைச்சல் என்று கேட்டுக்கொண்டே வந்துசேர்ந்தாள்.

இவ்வளவும் ஒன்றும் பேசாமல் புஸ்தகத்தையே பார்த்துக் கொண்டிருந்த அமிர்தம் "இங்கே பாருங்கள் மாமி எங்கள் சகோதரிகளுக்கு சமைக்கவும், பிள்ளை வளர்க்கவும்தான் தெரியுமாம் வேறென்றும் தெரியாதென்றல்லவா எழுதியிருக்கிறாள்" என்று சொல்லி பல்லை நறுக்கெனக் கடித்தாள். அவள் முகத்தில் எள்ளும், கொள்ளும் போட்டால் வெடித்திருக்கும். அவளின் அசாத்தியமான கோபத்தின் காரணம் எனக்கு ஒன்றும் விளங்கவில்லை யானதால் "என்ன அமிர்தம் நம் சகோதரிகளுக்குச் சமையல் செய்யவும் பிள்ளைகளைச் செவ்வையாக வளர்க்கவும் தெரியுமென்றுதானே எழுதி யிருக்கிறாளென்கிறாய். அதைவிட நம் சகோதரிகளுக்கு வேறென்ன தெரிய வேண்டும். குல ஸ்திரீகளுக்கு வேறு என்னதான் தெரிய வேண்டுமென்று எழுதுகிறாள். எங்கே வாசிபார்ப்போம்" என்றேன் நான்.

சமையலாவது சரியாய் தெரியுமென்று எழுதுகிறாளா? அதுவுமில்லை. நாள் முழுதும் சோற்றையும் கறியையும் ஆக்கிக் கொண்டே இருப்பார்களாம். பிள்ளை வளர்ப்பதும் அப்படியாம். வருத்தமான நேரத்தில் பொரிச்ச சோறு அல்லது எறும்பு முட்டை கொடுப்பார்களாம் இப்படியும் நடப்பதுண்டா? என்று சீறினாள் அமிர்தம்.

இதென்ன கேள்விப்படாத அதிசயமா யிருக்கிறதே. எறும்பு முட்டையை யாராவது சாப்பிடுவார்களா? ஒரு ஊரில் எறும்புக் கருவாடு சாப்பிடுவதாகப் பத்திரிகையில் வாசித்திருக்கிறோம். அந்த ஊர் வளாக்கும் அவள். எறும்பு முட்டையாவது! அதைப் பிள்ளைகளுக்குக் கொடுப்பதாவது! இது இணையிலா அதிசயமா யிருக்கிறதே! மற்றப்படி பொரிச்சசோற்றை யாராவதுவருத்தக் காரருக்குக் கொடுப்பார்களா? என்று அதிசயித்தேன் நான்.

இல்லை மாமி, நம் ஊரில் நாட்டுப்புறத்தில் குழந்தைகள் சாப்பிடும் இனிப்பை பல்லி முட்டை என்பார்களே அதைத்தான் எண்ணிஞ்ளாக்கும் அவள். மற்றது ஒரு வேளை பொரிச்ச அரிசியா யிருக்கலாம் என்றாள் சரஸ.

அமிர்தம் வீணைப் பதறுதே. முதலிலிருந்து ஆறுதலாக வாசி, அவளின் புத்தி நட்பத்தை நாங்களும் அறிந்து கொள்வோம் என்று நாங்கள் யாவரும் சொல்ல அமிர்தமும் வாசிக்கத் தொடங்கினாள்.

கற்றறிந்த கனவான்கள் சீதனத்தைப்பற்றி எதிர்த்துப் பேசத் தொடங்கியிருப்பது எனக்கு ஆச்சரியமா யிருக்கிறது. எங்கள் சமூகத்தில் ஆங்கிலங் கற்ற பெண்மணிகள் அநேகரிருப்பினும் அவர்கள் யாவரும் ஒன்றுக்கும் பிரயோசனமில்லாத வெள்ளை யானையைப் போன்றவர்கள்.

அமிர்தம் இவ்வளவையும் தமிழ் படுத்திச் சொல்லி ஒரு பெருமூச்சுடன் அப்படியானால் அவள் உங்கள் சமூகத்தவளா! ஒரு வீடென்றால் எத்தனையோ ஓட்டை ஒடிசல் இருக்கத்தானே செய்யும். அதையே கவனித்துத் தூக்கித் தூற்றுவது அவளையே அப்படியானவளென்பதை யல்லவா காட்டும். மேயோ ஆவது குற்றமில்லையே அவள் வேறு நாட்டைப்பற்றி யல்லவோ அவதூறு எழுதினாள். இது கோடரிக் காம்பு போல் தன் இனத்தையே தூற்றுகிறாளே. இப்படி எழுதுபவர்களுக்கு வேறென்றும் மனசில் படுவதில்லையோ. கோழியை எங்கே கொண்டு போய்விட்டாலும் அது குப்பை இருக்கும் இடம் பார்த்து அதைக் கிளறவே ஓடுமாம் என்று மொழிந்தாள் சுசீலா.

அமிர்தமும் சிலேபால் கேட்டுக் கொண்டிருந்து விட்டு மறுபடியும் வாசிக்கத் தொடங்கினாள்.

தற்கால வாலிபர் பிரயோசன மற்றவர். பெண்களோ அதில்கேடு. ஓர் பெண்ணை ஓர் ஆண் வரித்துக் கொள்வது ஒரு திருகைக் கல்லை அவன் கழுத்தில் கட்டிவிட்டது போலிருக்கிறது. தன் பிற் சீவியத்தில் இந்தப் பெருஞ் சுமையைக் காவுவதற்கே அவன் சீதனத்தைக் கேட்கிறான். அவன் கேட்பது சரியே என்று சொல்லி மூச்சு விடுவதற்குக் கொஞ்சம் நிறுத்தினாள்.

என்னம்மா, வெட்கக்கேடு பெண்கள் புருஷர் கழுத்தில் திருகைக்கல் போன்றிருந்தால் அவர்கள் என் கலியாணம் கட்டிக் கொண்டே யிருக்கிறார்கள். அவள் யார் கழுத்துக்குத் திருகைக் கல்லாகப் போகிறாளோ. பாவம், அவன் பாடுதான் திண்டாட்டம். மற்றப்படி ஒரு புருஷன் கலியாணம் செய்து கொண்டதும் எவ்வளவு சந்தோஷமாகவும், செட்டாகவும், சீராகவும் தன் குடும்பத்தை இருவரும் சேர்ந்து நடத்துகிறார்களென்பதை அறிவாளா? பாவம், அவள் தங்கள் குடும்பத்தை மட்டும் தானே அறிந்திருப்பாள். அதைவிட உலக அனுபவம் அவளறிவது எங்ஙனம் என்றாள் தங்கா.

அமிர்தம் மறுபடி தொடங்கி பழைய காலத்தில் மனுஷன் தன் குடும்பத்தை சம்ரட்சிக்க கஷ்டப்பட்டு வேலை செய்வான். மனுஷியானவள் வீட்டு வேலைகளைச் செய்து வருவாள். தற்காலத்

திலோ மனுஷன் தன் வேலையைத் தவறாது செய்து வருகிறான். ஆனால் மனுஷி என்ன செய்கிறாள்.

சமையலாள் சமையல் செய்கிறான். எஜமானி சாப்பிட்டு விட்டு நித்திரை கொள்ளுகிறாள். இல்லாவிடில் மோட்டார் வாகனத்தில் ஏறியிருந்து ஊர் சுற்றுகிறாள் என்று நிறுத்தினாள்.

அதுதான் தங்கா சொல்லிவிட்டாளே. "அற்பனுக்குப் பதவி வந்தால் அர்த்தராத்திரிக்குடை பிடிப்பார்களாம்" என்பதுபோல் சிலர் அப்படிச் செய்கிறார்களாக்கும். ஆனால் அவளறிந்திருப்பதளவு நாம் அறியவில்லை. சிறு குழந்தைகளில்லாமல் சகல வசதியுமுள்ளவர்கள் இவ்வூரில் தாங்களே சமையல் செய்யவில்லையோ. ஆனால் சிறு குழந்தைகளிருப்பவர்களுக்கு நேரமே யில்லாமல்லவோ வீட்டு வேலை சரியாக இருக்கிறது. நம்ம ஊரிலானால் மூத்தவர்கள் இருப்பார்கள். பக்கத்துக் கடைக்காவது ஓடிப்போய் ஏதும் அவசரத்துக்கு வாங்கி வருவார்கள். இந்த ஊரில் அதற்கென்ன செய்வது. புருஷரே உத்தியோகத்துக்குப் போகும்போது எல்லாம் வாங்கிக் கொடுத்துவிட்டுப் போனாலுண்டு. காலையில் எழும்பின நேரந் தொடங்கி எவ்வளவு செய்து முடிக்கிறோம். பழைய காலத்தில் புருஷருக்கு இப்படியான உடுப்புகளுண்டா? அதற்குப் பொத்தான் கட்ட வேண்டிய கஷ்டமுண்டா? சப்பாத்துக்குமை போட்டுத் துடைத்து வைக்கவேண்டிய தொந்தரவு உண்டா? பிள்ளைகளுக்கு இப்படி உடுப்புகள் தைக்க வேண்டிய வேலை உண்டா? இனி இத்தனை கட்டிலும் மெத்தையும் உதறித் தட்டி விரித்து வைக்கவேண்டுமென்ற நியதி உண்டா? இத்தனை கோப்பை மங்கு கழுவ வேண்டிய வேலை இருந்ததா அவர்களுக்கு! என்று இவ்வளவும் ஒன்றும் பேசாமலிருந்த சரஸ் படபட வென்று அடுக்கினாள்.

சரி இன்னும் எல்லாவற்றையும் அறிந்து கொண்டு உங்களபிப்பிராயத்தை வெளியிடுங்களென்று சொல்லி அமிர்தம் தொடர்ந்து வாசித்தாள்.

தன் குடும்பத்துக்குப் பெலமுள்ள சாப்பாடு கொடுக்கிறாளா? போசன விதியில் அவளுக்குக் கவலையுண்டா? வீட்டை அழகுற வைத்திருக்க அவள் அறிவாளா? வீட்டணிகலனைப்பற்றிப் படித்திருக்கிறாளா? சிற்ப சாஸ்திரத்தைப்பற்றி அவளுக்கு என்ன தெரியும்? என்று அவள் சொல்லி வாய் மூடுமுன் மூவரும் சிரித்த சிரிப்பினால் அமிர்தம் திடுக்கிட்டு விட்டாள். என்ன என்று கேட்டேன். வீடு கட்டத் தெரிய வேண்டுமா மோ பெண்களுக்கு என்று சொல்லி மறுபடியும் சிரிக்கிறார்கள். அமிர்தத்துக்கு மட்டும் சிரிப்பு வரவே இல்லை. பேசாமலிருக்குப்படி கையமர்த்திவிட்டு வாசிக்கத் தொடங்கினாள். நாகரீகமாக வீட்டு வேலை செய்யத் தெரியுமா? ஒரு சிறு தோட்டம் வைத்திருக்கத் தெரியுமா? என்றதும் தங்கா சொன்னாள்:—எங்கள் ஊர் தோட்டம் தான் கனம். என் பாட்டன் தோட்ட வேலைதான். அதாவது கமம்தான் அவர் தொழில். நானும்அவர் வழித்தோன்றலானதினால் எனக்கும் தோட்ட வேலையில் பயிற்சி உண்டு. எங்கள் வீட்டுக்கொல்லைப்பக்கத்தைப் பார்த்தீர்களா? வாழை, கத்தரி, வெண்டி, அவரை, மிளகாய்ச்செடி, எல்லாம் வைத்திருக்கிறோம். சரஸ்வதியும் சிறு தோட்டம் வைத்திருக்கிறாளே. எங்களுக்கு இடம் போதாது இல்லாவிடில் எவ்வளவு பெரிய தோட்டம் வைத்திருப்போம் என்றாள்.

மனுஷருக்குப் பிரயோசனமான அந்தக் காய் கறித் தோட்டத்தை வைத்திருக்கும்படி அந்த நாகரீக நங்கை எழுதுவாளா? அவள் பூந்தோட்டமல்லவோ வைத்திருக்க வேண்டும் என்று எழுதியிருப்பாள் என்றாள் சரஸ். அதெற்கென்ன இரண்டு பூஞ்செடியையும் அந்த தோட்டத்தில் நட்டால் போச்சு நினைத்த நேரம் பூவைப் பறித்துக் கொள்ளலாம் என்றாள். சுசீலா.

என் பூந்தோட்டம் வைக்கத் தெரியாமலா இருக்கிறோம். வீட்டுக்கு முன்னால் இடமுள்ளவர்கள் வீட்டில் பூந்தோட்டம் இல்லாமலா இருக்கிறது. இதற்குக்கூடவா பள்ளிக்கூடம் போய்க் கற்றுக் கொள்ள வேண்டும். இதுகளெல்லாம் பார்க்காதவள் போலல்லவா இருக்கிறது என்றாள் சரஸ்.

சரிதான் உங்கள் பிரசங்கம் கடைசியிலாகட்டும் என்று சொல்லி மிகுதியைத் தொடர்ந்தாள் அமிர்தம்.

பிள்ளைகளின் உடம்பு சுகத்தைப்பற்றியோ படிப்பைப் பற்றியோ கவனம் செலுத்துகிறாளா? அவளுக்கு உடுத்தத்தான் தெரியுமா? வரவு செலவுக் கணக்கு அறிவாளா? காசை மிகுதிப்படுத்த அறிவாளா? தன் குடும்பத்தில் பேராசையுடையவளா யிருக்கிறாளா?

இது எல்லாம் அறியாதவளாய் யாரும் இருப்பதாய் நாம் அறியோம். நம் பெண்கள் இது அறியாமலிருந்தால் நம் சமூகம் எப்பவோ அழிந்து மண்ணோடு மண்ணாக மறைந்து போயிருக்குமே. சாப்பாட்டு வகையில் நாம் ஒன்றுமறியாமல் இருந்து நாமெல்லாம் சிறு வயசில் மாண்டு மற்றச் சாதியார் ஆயுள் பூரா ஜீவிக்கிறார்களோ? நம்மவர் அனேகமாகத் தம் ஊன் வளர்க்க விரும்பியவர்களல்ல. அதிலே நாட்டமாய் அதையே எண்ணிச் சீவிக்கிறவர்களல்ல. நம் மூதாதையர் அப்படி ஒன்றும் எண்ணாமல் நடந்து வந்ததினால் தான் இப்பவும் திடகாத்திரராய் விளங்குகிறார்கள்

தற்காலத்தவர் தங்கள் முக்கால் நேரத்தையும் என்னசிட்பாட்டில் "ஷிற்றமீன்" இருக்கு எனன சாப்பாட்டில் "ஷிற்றமீன்" இல்லே என்று ஆராய்ச்சி செய்வதிலேயே கழித்து வயிற்றுக்கே பூசை செய்து வருகிறார்கள் என்றாள் தங்கா.

அவள் நம்மவர் ஒன்றுமறியாமல் அல்லவோ இருக்கிறார்கள் என்கிறாள் நீ அவர்களை, அதை ஆராய்வதிலேயே காலத்தைச் செலவிடுகிறார்கள் என்கிறாயே என்றாள் சரஸ்.

எல்லாம் சரி, கொஞ்சம் பொறுங்கள்மிகுதியை வாசி அமிர்தம் என்றேன் நான். அமிர்தமும் தொடங்கினாள்.

இம்மாதிரி நான் விவரித்த லட்சணங்களெல்லாம் பொருந்திய ஒரு பெண்ணை மணஞ செய்தால்தான்ஒரு மனுஷன்சுகஜீவியாக நீடூழி காலம் வாழ்வான். அத்துடன் லாபமும் அடையப் பெறுவான் என்று அமிர்தம் முடிப்பதற்குள் தன் சமூகத்தில் இப்படியான லட்சணங்களமைந்த பெண் இல்லே பென்கிறாளே பின் எங்குதான் அவன் போய்த் தேடுவான் என்றாள் தங்கா.

வேறு சாதியில கலப்பு மணம் செய்யச் சொல்லுகிறாள் என்றாள் சரஸ். காலம் வரவர நன்மை யாய்த்தான் வருகிறதுஎன்றாள் சுசீலா.

அமிர்தம் மறுபடி வாசிக்கத் தொடங்கினாள். இதெல்லாம் உண்மையில் பெண்பிள்ளைகளின் குற்றமல்ல. இப்படியானவற்றைப் பழக்குவதற்குச் சரியான பள்ளிக்கூடம் ஸ்தாபிக்காதவர்களின் குற்றமே.

அதுமட்டில் அவள் சொல்வது வாஸ்தவமே என்றாள் சரஸ். ஏன் நாங்கள் அவை ஒன்றும் பள்ளிக்கூடத்தில் படிக்காமல் வீட்டில் நம் பெற்றோரிடம் கற்றுக்கொண்டு எங்கள் குடும்பத்தைச் செட்டும் சீருமாக நடத்தவில்லையோ. "தாயைப் போல் பிள்ளை, நூலைப்போல் சேலை" என்றபடி தாய் சமர்த்துப் போலிருக்கும் பிள்ளையின் கெட்டித்தனம் என்றாள் தங்கா.

அதுவும் சரிதான் ஆனால் தற்காலத்தில் பெண் குழந்தைகளுக்கு என்ன படிப்புச் சொல்லிக் கொள்ளுகிறார்கள். ஒரு ஓட்டைத் தோம்பில் தண்ணீரை நிரப்புவார்களாம். ஒரு நிமிஷத்தில் இத்தனை கலன் தண்ணீர் வெளியே ஓடி விடுமாம். அப்படியே நிரப்பிக் கொண்டிருந்தால் எத்தனை நிமிஷத்தில் அந்தத் தொட்டி நிரம்புமாம் என்றெல்லாம் கணக்குக் கொடுக்கிறாளே இதெல்லாம் பெண் குழந்தைகளுக்கு என்னத்திற்கு என்றாள் சரஸ்.

இனி வருங்காலத்தில் பெண்கள் எல்லாம் வேலை பார்ப்பார்களாம் அப்போ தண்ணீர் கணக்குவேலை அகப்பட்டால் அது சுலபமதானே என்றாள் தங்கா.

பொம்மைட்டிகள் எல்லாம் வேலை செய்தால் புருஷாளெல்லாம் அடுப்பங்கரையில் உட்கார்ந்து சமைத்துக் வைப்பாரோ? குழந்தை பெற்றுக் கொள்வதும் அவள் வேலையாக மாறி விடுமோ என்றாள் சுசீலா.

உங்கள் பரிகாசங்களெல்லாம் பிறகாகட்டும் என்று சொல்லி அமிர்தம் தன் வேலையில தொடங்கினாள்.

இப்படியான கேள்வி எல்லாவற்றிற்கும் மறுமொழி என்னவென்று கேட்டால் ஒன்றும் இல்லை என்றே வருகின்றது. அவளுக்குப் பிரயோசனமானது ஒன்றுமே தெரியாது.

அவளுக்கு, அவளுக்கு என்று சொல்லிக்கொண்டே வருகிறாயே "அந்த அவளுக்கு" என்றால் ஆரு அது என்றாள் சுசீலா. அதுதான் நம சாதிப் பெண்களுக்குத்தான் என்றாள் அமிர்தம். நான் ஒருவேளை இது எழுதினாலே, அவளாக்கும் என எண்ணி விட்டேன், சரி வாசி என்று சுசீலா சொல்ல மறுபடி வாசிக்கத் தொடங்கினாள் அமிர்தம்.

அவளுக்கு ஒருவேளை சோறும் கறியும் நாள் முழுதும் சமைக்கத் தெரியும். பிள்ளைகள் வருத்தமாயிருக்கும்போது பொரிச்ச சோறும் எறும்புழுட்டையும் சாப்பிடக் கொடுக்கத் தெரியும். வடிவு நிறமொன்றுமே தெரியாமல் இரைச்சிலுகள் மேலும் தலகணி உறைகள் மேலும் பூவேலை கொஞ்சம் செய்யத் தெரியும். ஆர்மோனியத்தை வாசித்து அத்துடன் கிளிபோல் கொஞ்சம் கீச்சிடத் தெரியும் என்றதும் தாங்க முடியாது யாவரும் சிரித்து விட்டோம் எங்களைப் பார்த்து அமிர்தம்கூடச் சிரித்துவிட்டாள். ஒருவர் கீச் சென்ற கோல்ல, ஒருவர் எறும்பு முட்டை என்று சொல்ல, ஒருத்தி பல்லி முட்டை என்று சொல்ல, எங்கள் சந்தோஷம் உச்ச ஸ்தானத்தை அடைந்துவிட்டது. தாங்க முடியாத சிரிப்பில் களைத்துச் சோர்ந்துவிட்டோம். அவள் கிளி மொழியின் அருமை பெருமைகளை அறிவாளா?

கொஞ்சம் தண்ணீர் வாங்கிக் குடித்துவிட்டு மறுபடியும் தொடர்ந்தாள் அமிர்தம்.

நிணைத்த நேரம் வீட்டைக் கூட்டுவாள் அரைச் சட்டை, பைத்தாவணி போட்டு வயிற்றை உள்ளே தில் இருமடங்கு பெரிதாகக் காட்டிக் கொள்ளுவாள். இதெல்லாவற்றிற்கும் ஈடு வேண்டாமோ? கடவுளே! என்றதும்.

சரஸ் பலமாகச் சிரித்தாள் எங்களுக்கு ஒன்றும் விளங்காததினால் அரைச்சட்டைப்பை தாவணி என்றால் என்ன என்று கேட்டோம். அதுதான் "Pocket saree" என்று சொல்லி மறுபடியும் சிரித்தாள் நாங்களும் சேர்ந்து கொண்டோம்.

அமிர்தம் அமைதியாயிருக்கும் படி கையமர்த்தி மிகுதியை வாசித்தாள். அவள் ஐரோப்பிய பெண்ணைப் போன்றிருந்தால் அது முழுதும் வேறு விஷயம் அனேக வருஷங்களுக்குமுன் இந்தியமகாராஜா ஒருவர் ஆஸ்திரேலியப பெண்ணைக் கலியாணம் பண்ணிக் கொண்டாராம். நியாயமென்ன சொல்லுகிறதென்றால் "சகல லட்சணங்களும் பொருந்திய பெண் இந்தியாவிலேயே இல்லை" என்பதாம். அவர் சொன்னது சரியெனவே நான் நினைக்கிறேன் என்றதும் சுசீலா என்னவோ சொல்லவாயெடுத்தாள். இன்னும் ஒரு வரிதான். அது முடிந்ததும் யாவரும் உங்கள் அபிப்பிராயத்தை வெளியிடலாம் என்று சொல்லி அமிர்தம் தொடர்ந்தாள்.

ஐரோப்பிய பெண்ணுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது ஆசியாப் பெண் சூனியமாயிருக்கிறாள். நான் முன் சொன்னதுபோல் அவள் ஒரு மனுஷனுக்குக் கழுத்தைச் சுற்றிக்கட்டிய திருகைக் கல்லுப் போன்றவள்.

என்று நம் நாட்டு மேயோவின் கோழிபோன்ற புத்தி கூர்மையான கடிதத்தை ஒரு பெரிய முச்சுடன் வாசித்து முடித்தாள் அமிர்தம்.

ஆரோ ராசா கட்டினனும் அப்படியே ஆசியாக் கண்டத்து ஆண்மக்களெல்லாரையும் ஐரோப்பாக் கண்டத்துப் பெண்களையே கலியாணம் செய்யச் சொல்லும் அவளின் புத்தியையும் மூளையையும் எந்தக் கல்லுக்குஒப்பிடலாம் என்றாள் தங்கா.

அமரிக்கப் பெண்ணாகிய 'மேயோ' என்பவள் நம்நாட்டையும் நம்மவரையும் நம்பழக்க வழக்கங்களையும் இகழ்ச்சியாக எழுதி ஒரு புஸ்தகம் வெளியிட்டாளாமே. அதற்கு எதிராக எத்தனை ஆடவர் வீராவேசத்துடன் எழும்பி அவளுக்கு "மேயோவுக்குச் சவுக்கடி" மறுமொழி கொடுத்தார்களாம். இதெல்லாம் அறியாமலா இப்படித் தன் சமூகத்தையே தூற்றத்தொடங்கினாள். கடைசியில் ஐரோப்பிய ஸ்திரீகளைக் கலியாணம் பண்ணிக் கொள்பவர்களை நல்லவர்க ளென்றும் அவர்கள் செய்தது நியாய மென்றும் இன்னும் யாவரையுமே அப்படிச் செப்பச்சொல்லுகிறாளே. ஐயையோ கலிகாலமே! அவள் இனி ஆரைக்கட்டிக் கொள்ளுவாளோ என்று மூக்கின் மேல் விரலை வைத்து மிகுந்த ஆச்சரியப்பட்டாள் சுசீலா.

எனக்கு என்ன சொல்வதென்றே தோன்றவில்லை. ஒரு பெண் தன் சமூகத்தவரைத் தாழ்த்த விரும்பினால் தன்சொந்தபாஷையில் சிலர் அப்படிச் செய்கிறார்கள். அதெல்லாம் விட்டு நம்மவர் யாவரும் திருந்த வேண்டும் என்று எழுதியிருக்கலாம். அதைவிட்டு ஆசியாப் பெண்கள் இப்படி இருக்கிறார்கள் அப்படி இருக்கிறார்கள் என வீண் அபாண்ட மெல்லாம் அன்னியபாஷையில் எழுதித் தூற்றியிருக்கிறாள். இது ஆசியா பெண்கள் யாவருக்குமே ஒரு சூடுபோட்டதுபோலல்லவா இருக்கிறது. அவள் எழுதினதைப் போல் யாராவது இருந்தால்லவோ ஆண்மக்களாவது யாரும் என் மனைவி திருகைக்கல்லுப் போன்றிருப்பாள் அவளைக்காவுவதற்கே நான்சீதனங்கேட்கிறேன் என்று சொன்னால் அவர்களுடன் நாம் வாதாடலாம். பெண்கள் யாவரும் சேர்ந்து நின்றுசீதனமே கொடுப்ப தில்லை யென தீர்ப்பாக்கலாம். இல்லை இப்படியான ஆடவரைக் கலியாணமே செய்து கொள்வதில்லை யென முடிவுகட்டலாம். ஆனால் இதுவோ திருகைக்கல்லுப் போன்ற பெண்ணை எழுதுவதால் அவளின் மூளையை எந்தக் கல்லுக்கு ஒப்பிடலா மென்று தங்கா சொன்னது போல் எனக்கும் எந்தக்கல்லுக்கு ஒப்பிடலா மென்றே தோன்ற வில்லை என்றேன்.

என்மாமி திருகைக்கல்லுத்தான் போச்சு, அம்மிக்கல்லுண்டு, ஆட்டுக்கல்லுண்டு, என்றாள் சுசீலா. யாவரும் சிரித்தோம். அவளுக்குப்போல் நமக்குமென்ன மூளை கல்லாய்ப்போச்சா? அவளைக்கல்லோடு ஒப்பிடுவதற்கு அவளுக்கு "நம் நாட்டுமேயோ' என்று பெயர் வைத்தால் பொருந்தும் என்றாள் அமிர்தம.

இப்படியே எங்கள் பொழுதும் நம் நாட்டு மேயோ வின் ஆபாசக் குப்பைகளுடன் கழிந்தது. மணியும் ஆய்விட்டதால் எங்கள் கூட்டமும் கலைந்தது.

பாலர் பகுதி.

ஓர் பெரிய அதிசயம்.

ஐயாயிரம் வருஷங்களுக்கு முன்னே பூண்டு என்னும் ஓர் அரசன் இருந்தான். அவனுக்கு ஐந்து மக்கள் இருந்தனர். அவர்களைப் பாண்டவர்கள் என்று அழைத்து வந்தனர். அவர்களில் மூத்தவன் பெயர் தரும். அவர் அறிவில் சிறந்தவர். ஒருபோதும் பொய் சொல்லாதவர். அவர் ஒருநாள் தன் அரண்மனையில் இருக்கும்போது ஓர் குடியானவன் அவரிடஞ் சென்று, "அரசே! இந்த உலகத்தில் பெரிய ஒரு அதிசயம் அடியேனுக்குச் சொல்லுங்கள்" என்று கேட்டான். அதற்கு அவர், உலகத்தில் மனிதர்கள் நாள்தோறும் மரிக்கின்றனர். ஆனால் அதைக் கண்டும் மனிதன் தான் மாத்திரம் இறந்து போவான் என நினையாமல் நடக்கிறான். இதுவே உலகத்தில் பெரிய அதிசயம்," என்று விடை அளித்தார்.

ஆதலால், பெரியோர்களே! பிள்ளைகளே! நாம் எல்லோரும் எப்போவாயினும் இறக்க நேரும் என்பதை உணர்ந்து, பொய் சொல்லாமலும், களவு எடுக்காமலும், புறங்கூறாமலும், கடவுள் இடத்திலும் மற்றும் உயிர்கள் இடத்திலும், அன்புள்ளவர்களாகவும் நடக்கத் தெண்டிப்போமாக.

பீ. கற்பகவல்லி.